# முகடு

mukadu.editer@gmail.com

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

புரட்டாதி - ஐப்பசி 2014




இருமாத இலக்கிய இதழ்

# சமர்ப்பணம்



தமிழுக்கும் தமிழ்த் தேசத்திற்கும்

தங்கள் இன்னுயிர்களை ஈய்ந்த அனைத்து

உயிர் கொடையாளிகளுக்கு

சிரம் தாழ்த்தி வணங்கி

இத்தமிழ் இலக்கிய சஞ்சிகையினை

சமர்ப்பிக்கின்றோம்

# பதிப்புரை

நீண்டகாலமாகத் தொடர்ந்த ஈழவிடுதலைப் போராட்டம் அதன் காலணி நீட்சியில் பரிணாமம் அடைந்து இப்போது ஒட்டுமொத்த தமிழர்களின் அபிலாஷையான தமிழ்த்தேசியம் என்பதில் வந்து நிற்கிறது. தமிழ்த்தேசியம் அமைவதே உலகின் தொன்மைக்குடியான தமிழ்க்குடியை அன்னிய ஆக்கிரமிப்புக்கள் தரப்படுத்தல்கள் அடக்குமுறைகள் ஒடுக்கப்படுதல்களில் இருந்து காத்துக்கொள்ள உதவும். தமிழ்த்தேசிய நீரோட்டத்தில் எழுந்த பல அமைப்புக்களும் இயக்கங்களும் கட்சிகளும் காலப்போக்கில் சுயபெருமைகள் சுயலாபங்கள் விலைபோதல்களால் தடம்மாறிப்போன நிலையில் புலம்பெயர் இளைஞர்களின் நீண்டகால உழைப்பின் பயனாக ஒன்றிணைந்த தன்னலங்கருதா இளையோர்கள் பலரின் சங்கமமாக உதித்த தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை ஆனது  தமிழ்த்தேசியத்தின் பாற்பட்டு இழந்த நமது உரிமைகளை மீட்டெடுக்கும் வண்ணம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. களத்தில் பாரிய இனப்படுகொலையின் பின்பும் நிகழும் அச்சுறுத்தல்களை தடுக்கவும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை அதில் இருந்து மீட்கவும் போர் முடிந்தும் பல ஆண்டுகள் ஆகியும் எந்தவொரு புனரமைப்பும் லங்கா அரசு முன்னெடுக்கா நிலையில் அங்கு உதவியின்றி வாடும் நம் சொந்தங்களுக்கும் முதியோருக்கும் உதவும் வகையிலும் இனிவரும் காலங்களில் முழுமூச்சோடு இயங்க இருப்பதால் அதன் முதற்கட்டமாக நமது முகடு எனும் தமிழ்  இலக்கிய சஞ்சிகை வெளியிடப்படுகிறது. எந்தவொரு சுயலாபமும் கருதாது சுயபெருமையும் தேடாது நம்மை முன்னிறுத்தாது தமிழ்த்தேசியமும் தமிழர் வாழ்வும் தமிழர் வளங்களும் காக்கப்படவேண்டியவை, போற்றப்படவேண்டியவை என்கிற ரீதியில் நலிந்துபோயுள்ள நம் தமிழ்ச் சமூகத்துக்கு புது இரத்தம் பாய்ச்ச புறப்பட்டுள்ள இவ்விளைஞர்களை நமது மூத்தவர்களாகிய நீங்கள் வாழ்த்துவீர்கள், கரங்கொடுப்பீர்கள். சேர்ந்து வருவீர்கள் என்ற நம்பிக்கையில் உலகெங்கும் பரவிப்படர்ந்துள்ள ஒட்டுமொத்த தமிழர்களும் சாதிமதம் கடந்து கைகோர்ப்பீர்கள் என்ற வேணவாவில் நமது நீண்ட பயணத்தின் முதல் அடியாய் முகடு எனும் தமிழ்  இலக்கிய சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

நன்றி

**தமிழ் இலக்கிய**
**இளைஞர் பேரவை.**

# முகடின் உள்ளே

அன்புடன் ஒரு மடல்

இளைஞர்களுக்கு ஏன் இலக்கியம்

ஐ நாவே எனது சாட்சியைக்கேள்

இராவணன் யார்

மரணமும் வாழ்வும்

வன்னியில் இருந்து ஒரு மடல்

ஐ நா எனும் நாடகமேடை

நினைவுகளின் பிடியில்

இனம் மாறும் தமிழர்கள்

இம் மண்ணின் பூர்வ குடிகள்

டால் டக்கி டமால்

எமது சமய வழிபாட்டு முறைகள்

சொல்லிடுவன்

குமரி கண்டம்

தாயக பூமி

தாவீதின் கற்கள்

விழித்து பாருங்கள்

# அன்புடன் ஒரு மடல் அவுஸ்திரேலியாவிலிருந்து...

அன்புடன் ஒரு மடல்
அவுஸ்ரேலியாவிலிருந்து...

முகடு
உனக்கு முக்காடு
போடுகின்றேன்
உன் முயற்சிக்கு
எத்தனை விழுக்காடு
நான் போட்டிட...!!

சிதறிக் கிடக்கும்
எம் சிந்தனையை திரட்டி
சிந்திய
செவ்விரத்தத்திற்கு
சேனை சேர்க்கும் இதழாக
மலர்ந்திட வேண்டும்...!!

சோர்வில்லாமல்
செய்தியை கொண்டு சேர்ப்பாய்
என்ற ஆதங்கம்
எல்லோர் மனங்களிலும்
வேறுபாடுகளால் வேரறுந்து
நிற்கும் எம் தமிழ் சாதிக்கு
வேராய் நீ வெளிவா...!!

கலைஞர்களை வாழ்த்தாமல் போனால்
காலத்தில்
வாழ்ந்தென்ன பயன்....!!
கலைத்துறையின் பயணம் வெற்றிமேல்
வெற்றிபெற வாழ்த்துக்கள்...!!

தேசம் கடந்து தூரமாக வாழ்ந்தாலும்
தமிழ்த் தாயின் பிள்ளைகள் அல்லவா
நாம்....!!

நீ பேசு தமிழ்
கேட்டால் சுரக்ககணும்
நெஞ்சுக்குள் தேன்
படித்தால் பிறக்கணும்
வீரம் தமிழனிடம்
இதுவே காலத்தின் தேவை...!!

நீ பேசுவது வீரத்தமிழ்...!!
நீ கொட்டும் தமிழ்
வெட்டிடும் வாள்களை
விட கூர்மையாகனும்...!

கூரைகள் கீழ் வாழும்
எல்லோரையும் இணைத்து
முகடு போடுவாயானால் சரித்திரத்தில்
உனக்கும் ஒரு
இடம் இருக்கின்றதே...!!
«முகடு» உன் பெயருக்கும்
பொருத்தமும் பெருமையுமே...!!

தமிழை வளர்த்தால் நீ
தரணியில் வாழலாம்
வாசகர் மனதில் நீங்கா
இடம்பிடித்து வாழ
வழிபிறக்கும்
முகடு வருக நீ
ஒரு இதழாய் வரவேற்கின்றோம்
உன் வரவை நாம்.....

**அ.பவளம் பகீர்**
சிறுப்பிட்டி

# இளைஞர்களுக்கு ஏன் இலக்கியம் ?

மாற்றம் ஒன்றுதான் இவ் ஜெகத்தினில் மாற முடியாதது என்ற நோக்கோடும் போக்கோடும் வாழ்ந்து வரும் இன்றைய மானிட சமுதாயத்தின் மிகப்பெரும் உயர் சக்தி இளைஞர் சக்தி. சக்தி கொடு சக்தி கொடு என்ற சாமியிடம் வேண்டிய அன்றைய கால இளைஞர்களிடமிருந்து இன்றைய மிலேனிய நூற்றாண்டு இளைஞர்கள் வெகுவாகவே மாறி விட்டனர் கட்டிளம் களையாக காத்திரமான உறுதியோடு சாத்திரம் பலவற்றை சாதாரணமாய் தூக்கி எறிந்து சரித்திரம் படைக்கும் இளைஞர்கள் நமது சகாப்தம் ஈன்றெடுத்த சாதனை மணி முடிகள், சம்பவங்கள் சில வேண்டுமானால் சில முதியோரின் துணையுடன் நடந்திருக்கலாம் (சாட்சியில்லை) ஆனால் சரித்திரங்களும் புரட்சிகளும் எல்லை இல்லா மாற்றங்களும் இளைஞர்களினால் பல இரும்புக்கரங்களின் முன்னிலையில் போராடி வென்றெடுக்கப் பட்டவை அவை தான் இன்றும் காலம் கடந்து நிலைத்து நிற்கின்றது. ஆரம்பத்திலேயே ஒரு விடயத்தை ஆழமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

"இளைஞர்சக்தி தான் இந்த
நூற்றாண்டின் ஈடிணையற்ற சக்தி"

இளைஞர்களினால் ஆற்றல் தந்த அபரீதமான சக்தியை இந்த உலக உள்ளூர், உள-மார தெளிவுடன் அறிந்திடாவிடினும் இளைஞர் என்றால் யார் என்று கேட்டால் பலரும் பல விதமாய் பொதுப்படையாய் சொல்லுவார்கள், இளமைவயதை உடையோர் தான் இளைஞர் என்பர். ஒரு சிலர் குதிக்கும் வயதில் குரங்கு சேட்டை செய்வோர் தான் இளைஞர் என்பர் மறு சிலர். இப்படி ஏராளமான வசைப்பாடல்களோடு இளைஞர் என்றால் யார் என்று பலருக்கு அர்த்தம் விளங்கும். ஆனால் இலக்கியம்? இலக்கியம் என்பதன் அர்த்தம்? குழந்தைக்கு தெரியுமா அர்த்தம்? உங்களுக்குத் தெரியுமா அர்த்தம்? குற்றமற்ற முதியோருக்கு தெரியுமா? பெற்றோருக்குத் தெரியுமா? கற்றோருக்குத் தெரியுமா? மற்றோருக்குத் தெரியுமா? இலக்கியம் என்பதன் அர்த்தம்? பெரும்பாலும் யாருக்கும் தெரியாது இலக்கியம் என்பது என்னவென்று. குழந்தையிடம் போய் கேட்டேன், பாப்பா.. இலக்கியம் என்றால் என்வென்றேன். "புது வகை பிஸ்கட்டா" என்று ஏக்கத்துடன் திரும்பி என்னைக் கேள்வி கேட்டது.

குமருகளிடம் போய்க் கேட்டேன். ஒருவகை நளினத்துடன் I don't know என்றனர். மூத்தோரான முதியோரிடம் கேட்டேன் ஓ அதுவா? நாங்க சின்னஞ் சிறுசுகளாய் இருக்கையில் ஊரிலேயும் கோவில்களிலும் போடுவது தான் இலக்கியம் என்றனர். ஒருவகை ஐயப்பாட்டுடன் கற்றோரிடம் போய் கேட்டேன், உஅஅஅ என்று பெருமூச்சுடன் literature?? wow, that is a wonderful அனுபவம் என்றனர். அது ஒரு different உலகம் என்றனர். சொன்னார்கள் இன்னும் சொன்னார்கள் "இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி" என்று பல நூறு வருடமாய் சொல்லும் அதே வசனத்தை விட்டார்கள். சொன்னது சரி இலக்கியம் என்பது

வெறும் கண்ணாடி மட்டுமல்ல. வெறுமனே உள்ளத்தை உள்ள படி காட்டும் கண்ணாடியாக இருந்திருந்தால் என்றோ ஒரு நாள் அது உடைந்து நொறுங்கியிருக்கும் ஆனால் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் கருக்கொண்ட மனிதனுக்கும் இலக்கியத்துக்கும் இடையில் உள்ள நெருக்கமான பிணைப்பு இன்னமும் நிலைத்திருக்கிறது என்றால் அந்தளவு இலக்கியம் இன்பமானது. அர்த்த புஷ்டி மிக்கது. காத்திரமானது. ஒட்டு மொத்தத்தில் காலத்தின் காவலன், காதலன் இலக்கியம்.

இனி நமது கட்டுரையின் நோக்கத்துக்கு வருவோம். இன்று நமது ஈழத்தினுடைய தமிழ் சமுதாயம் ஏராளமான ஏமாற்றத்தோடு ஏனைய பல இனங்களின் ஏளனத்தோடு சர்வதேச அரங்கில் தலைகுனிந்து மட்டியிட்டு நிற்கின்றது. வெற்றி பெறுகின்ற போது அவ்வெற்றியை பெருமிதத்தோடு ஏற்றுக் கொண்ட நாம் என் இனம் தோல்வி அடைகின்ற போது அதற்கு ஆய-ிரம் காரணங்கள் சொல்லி சமாதானம் செய்து நிற்கின்றது சமாதானப் பேச்சும், ஆறுதல் அடை மொழிகளும் சில வேளை நம்மைத் தேற்றிக் கொள்ள ஒரு வேளை உதவலாம். ஆனால் எதிர்காலம் நம்மை போற்றி கொள்ள அவை நிச்சயம் உதவாது. அப்படியானால் நாம் ஒத்து கொள்வோம் நாம் தோற்று போன சமுதாயம் என்பதை ஏற்றுக் கொள்வோம். தோல்வியை மூலையிலே ஏற்றாமல் மனதினிலே இருத்திக் கொண்டால் தான் அடிமையாகி கிடந்த யூதனும் ஜப்பானியனும் இன்று உலகை ஆண்டு கொண்டிருக்கின்றார்கள். முட்களில் தந்து தோலை கிழித்து கொள்ளாதவனுக்கு ரோஜாவை தொடவும் அருகதையில்லை என்றான் ஒரு அறிஞன். வீழ்ந்தது நம் தவறில்லை வீழ்ந்தும் எழுச்சியாக்குகின்ற பணியே இன்றைய ஈழத்து இளைஞர்களின் இன்றியமையாத முதற் பணியாக அமைதல் வேண்டும். ஆனால் நம்கட்டிளம் காளையர் செய்யும் சேவைகளாவன....

கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியின் போது ஏற்பட்ட கலவரத்தில் இளைஞர்களினால் திருமணத் தகராறு காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நள்ளிரவில் கொடூரமாக வெட்டிக் கொலை. நகரின் பிரபல ஆண்கள் பாடசாலையொன்றில் நடாத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் ஐந்நூறு கஞ்சா பொதிகள் மீட்பு, குடிபோதையில் சென்ற இளைஞர் இருவர் மின்சார கம்பத்துடன் மோதி தலை சிதறிப் பலி, நகரின் பிரதான சாலையில் விபச்சார விடுதி சுற்றிவளைப்பு பல இளைஞர்கள் கைது, இரண்டு குழுக்களுக்கிடையிலான வாள்வெட்டு மோதலில் அறுவர் படுகாயம், இரண்டு இளைஞர்கள் பொலிஸ் பிணையில்
பேஸ்புக் விவகார காதலால் இளைஞன் தூக்கிட்டு தற்கொலை, பட்டப்பகலில் இளையோர் வீடு புகுந்து கைவரிசை காட்டியதில் 80பவுண் நகை உட்பட பல லட்சம் ரூபாய் பொருட்கள் உட்படப்பொருட்கள் திருட்டு, இளம் யுவதியின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு, தனிமையில் வசிதத மூதாட்டியை கொபாலை செய்து தங்க ஆபரணங்கள் அபகரிப்பு, மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் யுவதியின் சங்கிலியை அறுத்தனர். இவை தான் நமது இளைஞர்கள் பலர் நமது சமூகத்துச் செய்யும் பொறுப்பான சேவைகள், ஆகவே மாற்றங்களுக்கான தோற்றங்கள் நம் மண்ணில நிச்சயம் வரையப்படவேண்டும். அன்றேல் அழிவின் தோற்றம் நிச்சயமுண்டு. பலவழிகளுண்டு எனக்குத் தெரிந்த வழி இலக்கியம் பலியை துடைக்க

சிறந்த வழி இலக்கியம் திருக்குறளில் அடுப்பெரிய வழியிருக்கா? என்று பாமர கூட்டம் பதை பதைத்து நிற்கஇன்னிசை அளபெடைக்கும் இசைநிறை அளபெடைக்கும் பாகுபாடு சொல்லிக் காட்டும் கொழுப்பு மிகுந்த பகுத்தறிவாளனாக எனை நான் இனம் காட்டவில்லை ஆனால் திருக்குறளின் இனிமைகளை ஓரளவாவது படியுங்கள் என்கிறேன். இங்கிலாந்திலும் நியூசிலாந்திலும் அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் ஆராதிக்கப்படும் திருக்குறளை நீங்களும் கொஞ்சமாவதுதிறந்து பாருங்கள் என்கிறேன்.

வேலையை விட்டு, உழைப்பை ஊதி விட்டு இலக்கியம் படிக்கிறதா என்று நீங்கள் கேட்கலாம் இலண்டன் விசாவுக்கும் கோச்சடையான் டிக்கெட்டுக்கும் முதல் வரிசையில் கால் கடுக்க நிற்க நேரம் உள்ளதென்றால் ஏன் இலக்கியம் படிக்க நேரம் இல்லை. சரி வேண்டாம் வெய்யில் பொழுதினில் உழைப்பாளியாகவே இருங்கள் (ஊருக்கு நல்லது) இரவுப் பொழுதினில் இலக்கியவாதியாய் இருங்கள் (உங்களுக்கு நல்லது) ஆனால் ஒன்று இளைஞர்களே… பொருளும் பணமும் வாழ்க்கையை கொண்டாடுகின்ற கருவியாக இருக்க வேண்டுமே தவிர திண்டாடுகின்ற கருவியாக இருத்தல் கூடாது. ஒரு காலத்தில் பணத்தை மனிதன் ஆண்டு வந்தான். ஆனால் இன்று பணம் மனிதனை ஆள்கிறது. சகோதரனே… கடல் நீரை குடி நீராக மாற்றுகின்ற சக்தி உன் பணத்துக்கு இருக்கலாம் ஆனால் கண்ணீரை பன்னீராக்குகின்ற மகத்தான சக்தி இலக்கியத்திடம் மட்டுமே உள்ளது. இலக்கிய வாதிகள் ஒன்றும் வானத்திலிருந்து வந்தவர்கள் அல்லர். அவர்கள் வாழ்க்கையில் இருந்து வந்தவர்கள். அவர்களுடைய படைப்புக்கள் ஒவ்வொன்றும் அனுபவத்தாலும் அறிவாலும் குழைத்துக் குழைத்துக் கட்டப்பட்டவை. நண்பரகளே உங்கள் நவ நாகரீக சினிமாவ-ில் கற்பான புருஷர்களும் கந்தர்வ கன்னிகளும் மட்டுமே காட்ட பாடலாம் ஆனால் நம் இலக்கியத்தில் உண்மையான கண்ணீரும் கவலையும் காட்டப்பட்டுள்ளது. உங்களுக்கு தானே துன்பங்களும் துயரங்களும் பிடிக்காது. சிறுநேர இன்பம் நுகர பெற்ற தாயை அடித்து சங்கிலி பறித்து செல்லும் இளைஞனுக்கு எப்படி மற்றவரின் தெரிய வாய்ப்புண்டு? இலக்கியம் வளர்க்காவிட்டாலும் பரவாயில்லை திருக்கோவிலை தெருக்கோவில் என்காதீர்கள் வாய-ார வள்ளுவனை வாழ்த்தா விட்டாலும் வசை பாடாதீர்கள். பாரதியை புகழாவிட்டாலும் இகழாதீர்கள்.

பாரதி ஓர் தீர்க்க தரிசி பலர் சொல்லி உணரவில்லை. அவனின் ஒரே ஒரு கட்டுரையில் உணருகிறேன். பாரதி அறைகூவினான்,"எந்தவொரு சமுதாயம் தன் மூத்த கல்வியாளர்களை, கவிஞர்களை, புலவர்களை கணம் பண்ணுகிறதோ அந்த இனம் தான் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி பரிணாமம் பெரும்" என்றான். நாமும் நம் இளைஞர்களும் இலக்கியத்தையும் இலக்கிய வாதிகளையும் தூற்றினோம். நாட்டை விட்டு துரத்தினோம். விளைவு பரிமாணத்துக்கு எதிராய் பரி நிர்வாணம் அடைந்தோம்.

உன்னுடைய அற்ப சொற்ப ஆசைகள் மறுக்கப்படும் போது தொட்டாச் சுருங்கியாய் கிடந்த மனிதா, நீ முள்ளம் பன்றியாய் மாறி சிலிர்த்தெலுந்தாய் அல்லவோ?அதே போல் என் உன்

தாத்தாமார் என் அரும்பெரும் இலக்கிய சுவடுகள் கிழித்தெறியப்பட்டு எரிக்கப்படும் போது ஏன் இந்த மௌனம்? தேங்கிய குட்டையாய் அன்றி, வீழ்ந்தெழும் அருவியாய் நீ மாறு. அகிலம் உன்னை போற்றும் அண்டம் உன்னை வணங்கும்.

ஆனால் இலக்கியத்தை படிக்கும் போது ஒரு விடயத்தை மனதினிலே நிலை நிறுத்தி கொள்ளுங்கள் யாதெனில் என்னுடைய குருநாதர் கம்பபாரதி இ.ஜெயராஜ் அவர்கள் எமக்கு அடிக்கடி ஒரு விடயத்தைக் குறிப்பிடுவார், கவனமாக கேளுங்கள் "1330 குறட்பாக்களையும் மனனம் செய்து மாநாடுகள் பலவற்றில் நீ பல மகத்தான விருதுகள் பல வெல்வதை
விட ஒரே ஒரு குறளை உண்மையாக உன் மனதினில் நிலை நிறுத்தி வாழ்வாயானால் அதுவே உத்தமம் என்பார். ஆகவே இலக்கியவாதிகள் எல்லோரும் இலட்சிய வாதிகளும் அல்ல இமய மலைகளும் அல்ல. ஆகவே நண்பர்களே இலக்கியத்தைப் படியுங்கள். தாராளமாக படியுங்கள், நல்ல இலக்கிய மேடைகளை தரிசியுங்கள், கேளுங்கள், அதன் படி வாழுங்கள். இலக்கியத்தை படித்தவன் ஒரு நாளும் இழிவாக போனதில்லை.
இது என் வாழ்வில் கண்ட சத்தியமான உண்மை.

"இன்பமே ஒரு நாளும் துன்பமில்லை"

**ஸ்ரீ சிவஸ்கந்தஸ்ரீ**

---



# ஐ. நாவே என் சாட்சியை ஏற்றுக்கொள் .

என் முற்றத்தில்தான் அவள் பிறந்தாள் அவள் அண்ணனும் பிறந்தான்
என் வயது அவர்கள் பாட்டன் வயதிலும் பல ஆண்டுகள் மூத்தது
உங்களுக்குத் தெரியும் நீங்கள் கொடுத்த சுதந்திரம் சிறையிலும் கொடியதென்று
எத்தனை முறை அவர்கள் என்னை தனியாகவிட்டு போயிருக்கிறார்கள்
எத்தனை முறை நான் உறிஞ்சிய நீரில் தமிழனின் இரத்தவாடை
எத்தனை முறை என்முற்றத்தில் அன்னியனின் அடாவடித்தனம்
நீண்ட நாட்களின் பின் என் பிள்ளைகள் என் முற்றத்தில் ஓடித்திரிந்தனர்
எனக்குத்தெரியும் அவன் போராடி விழுந்த போது
அவர்கள் கண்ணீர் என்னை நனைத்ததை
ஒரே நாடு ஒரே மக்கள் என்று உரக்கக் கத்தும் குரல் என் காதுகளில் விழும்
மகிழ்வில் சில மகரந்தத்தை பூவாக்கி காயாக்கினேன்
இது நடந்து காலங்கள் ஆகவில்லை என் இதயத்தில் பெரும் அதிர்ச்சி
அவள் பதினாறை முடித்து பதினேழாகிப்பள்ளி செல்பவள் அவள் என் பூட்டி
சிட்டுக்குருவியாய் என் மடியில் ஊஞ்சல் கட்டி ஆடுவாள்
அவள் அழகு ஆன்மாவின் துடிப்பு பண்பாட்டின் உண்மை
அன்றுதான் ஒரே தேசத்தின் காவலர்கள் உள் நுழைந்தார்கள்
அண்ணன் சேவையில் அதிருப்தி கண்டவர் போலும்
நீ எதற்கு உதவினாய் என்ன செய்தாய் என இருட்டைத் தேடினர்
தாயும் பிள்ளையும் வாழ்ந்த வீடு தனிமையும் வறுமையும் சொந்தமிங்கே
காவலர் போர்வையில் காமுகர் புகுந்து தாயைத்தாக்கி பின்
தனிமையில் இருந்த அவளைப் புணர்ந்து அசிங்கம் செய்து ஆசையை தீர்த்தனர்
ஐயோ அவள் குரல் மனதை பிளந்தது
மௌனமாகிக்கிடந்தேன்
அருகில் இருப்பவரை அழைத்தேன் அத்தனையும் உயிர்தாங்கும் சடலங்கள்
நான் என்ன செய்வேன் என் இலைகளை உதிர்த்தி அவர்கள் அழகைப்புதைத்தேன்
என்மடிக்குள்
நாட்கள் போகட்டும் தமிழன் பிணம் தோண்டுபவர்
வருவர் அதில் நீங்களும் உறுப்பினராய் இருப்பீர்கள்.

**- கீர்த்திதீபன் -**



# இராவணன் யார்?



உலக வரலாற்றில் விமானத்தை கண்டு பிடித்தது யார் என்று கேட்டால் உடனே கொடுக்கப்படும் பதில் வில்வர் ரைட் ஒலிவர் ரைட், என்பது என் காதில் பல தடவை ஒலித்த விடை. இதை நானும் 8ம் வகுப்பு பரீட்சையில் பெயர் தெரியாததால் ரைட் சகோதரர்கள் என்று எழுதி சரி வாங்கிய ஞாபகம்.. இதிகாசங்களில் ஆரியர்கள் எழுதிய அனைத்தும் உண்மை என்று நம்பி அதில் இருக்கும் இலக்கிய சுவையோடு உறவாடிக்கொண்டிருக்கும் என் தமிழ் உறவுகளே! புட்பக விமானத்தில் வந்து இராவணன் சீதையை கடத்தி சென்றான் என்று அதே வான்மீகி சொன்னதை கம்பன் கவித்துவத்தோடு எழுதியதை நம்பும் தமிழர்கள் நாம் ஏன் விமானத்தை கண்டு பிடித்தது குபேரன் சகோதரர்கள் என்று சொல்ல முன்வரவில்லை... சிந்திக்கவும்...



இராவணன் யார் என்ற கேள்விக்கு பதில் கொடுக்க முனையும் நான் அவன் முன்னோர்களின் விபரங்களை தரவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றேன். மலைகளை கோட்டைகளாக வைத்தே தங்கள் அரண்களை அமைத்து பூர்வீக அரசர்கள் நாட்டை ஆண்டார்கள் சுகேசன் என்ற அரசன் குமரிக்கண்டத்தில் ஒரு பெரிய மலையில் இருந்து ஒரு பேரரசை ஆண்டான் இவன். மகேந்திர மலை அல்லது மணி மலை என்று சொல்லப்படுகின்ற நாகர்களின் அரச பரம்பரையில் தெய்வ வதி என்ற பெண்ணை திருமணம் செய்தான். இவர்களுக்கு மாலியவான், சுமாலி என இரண்டு புத்திரர்கள். இவர்களில் பராயம் வந்ததும் மாலியவான் ஈழத்துக்கு அரசன் ஆனான். இவனே பத்து நாடுகளை வென்று முதலில் தனது கிரீடத்தில் பத்து நாடுகளின் முடியையும் பதித்து ஒரு கிரீடத்தை அணிந்து இருந்தான். இவனே இராமாயணம் வர்ணனை செய்ததை விட மேன்மையான இலங்கா புரியை அமைத்து இருந்தான். இவனது ஆட்சியின் முடிவில் இவன் தம்பி சுமாலி நாட்டை ஆண்டான். சுமாலி மாதோட்ட நாகர் குல இளவரசி கேது மதியை திருமணம் செய்தான். இவர்களுக்கு ஆண் பிள்ளை இல்லை, ஒரே ஒரு மகள் அவள் பெயர் கைகேசி (தசரதன் மனைவி கைகேயி அல்ல) இதனால் மாதோட்ட அரசை ஆண்ட புலஸ்தியர்

குணவதி ஆகியோரது மகனும் கேது மதியின் அண்ணனும் ஆகிய வச்சிரமவாகு என்பவன் நாட்டை ஆண்டான். வச்சிரவாகு அழகாபுரி இயக்கர் குல தேவ கன்னி என்ற இளவரசியை திருமணம் செய்து அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனே வச்சிரவாணன். இவன் தந்தைக்கு பின் அழகாபுரியையும் இலங்காபுரியையும் ஆண்டான். இவன் நாட்டில் பெருமளவு செல்வம் இருந்தாலும் பூமியின் மிகப்பெரிய தேசத்தை ஆண்டதாலும் இவனுக்கு காலப்போக்கில் குபேரன் என்ற புகழ் பெயர் வரலாயிற்று. இவனே முதன் முதலில் சூரிய பிரகாசம் என்றும், புஷ்பக விமானம் என்று இருகடல் விமானங்களை வைத்திருந்தான். இவனது காலத்திலேயே ஈழத்தில் முதன் முதலில் சிவாலங்கள் கட்டப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. இவன் ஆட்சி பிரிந்த காலத்திலேயே அழகாபுரியில் இருந்து இயக்கர் குலத்தவர் ஈழத்துக்கு வந்ததாகவும் வரலாறு உண்டு. இவன் தந்தை வச்சிரவாகு சுமாலி கேதுமதியின் மகள் கைகேசியையும் இரண்டாம் தாரமாக திருமணம் செய்தான். இவர்களுக்கு பிறந்த பிள்ளைகளே இலக்கிய ரசனைக்காக ஆரியர் தம்மை உயர்வாய் காட்ட அரக்கர்களாய் சித்தரிக்கப்பட்ட இராவணன், கும்மகர்ணன், விபூசணன், சூர்ப்பனகை இவர்களுக்கு பெற்றவர்கள் இட்ட பெயர் முறைமே சிவதாசன், பரமன், பசுபதி, உமை அம்மை, வளர்ந்ததும் குபேரன் அதாவது வச்சிரவாணன் வம்சத்தில் தம்பிக்கே உரிமை உள்ள ஈழதேசத்தை கொடுத்து விட்டு புட்பக விமானம் என்ற ஆகாய ஊர்தியையும் கொடுத்துவிட்டு தான் அழகாபுரி அரசை ஆள செல்கின்றான்.

கால ஓட்டத்தில் ஆரியர்கள் தென்னிந்தியர்களை ஏமாற்றி அவர்களை தங்கள் கைப்பொம்மைகள் ஆக்கி ஈழத்தின் மீது படை எடுத்து பத்து தேசங்களுக்கு முடிக்கு உரிய அரசனாய் இருந்த சிவதாசனை வஞ்சகமாய் அவன் தம்பி பசுபதியை-யே தங்களுக்கு சாதகமாக்கி அவனது போரியல் நுணுக்கங்களையும் படைபல. இரகசியங்களையும் அறிந்த சிவா தாசன் என்கின்ற உலக மகாவீரனை வென்றார்கள். அன்பான உறவுகளே உங்களுடன் என்னும் சில நிமிடம் ஈழத்தவர்களை அழிப்பதற்கு பல்வேறு வழிகளில் தென்இந்தியர்களை ஆரியர்கள் பயன்படுத்தினார்கள். தென்னிந்தியர்களின் உதவியே சிவதாசன் என்கிற இரவணனின் ஈழ தேசம் வீழ்ச்சி அடையக் காரணம். அவர்களே பசு, பதி ஆகிய விபூசணனையும் ஆரியர்கள் பக்கம் மாற்றினார்கள். திராவிட மாயையில் தெளிவில்லாமல் மயங்கி நிற்கும் தென்னிந்திய உறவுகளே... இராமாயணம் கடைசியில் உங்களை குரங்குகள் என்றும் எங்களை அரக்கர்கள் என்றும் தான் சொன்னதே தவிர உயர்குல அரசுகள் என்று சொல்லி மாலை போடவில்லை.

ஆரிய திராவிட மாயையில் உங்களை இழந்த தமிழர்களே கொஞ்சம் சிந்தியுங்கள் எங்களை நாங்கள் யாரென்று உணர்ந்து கொள்வோம்.

- சிவமேனகை -

# மரணமும் வாழ்வும்...



இனவிடுதலைப் போராட்டம் என்பது அது எவ்வகையில் அமைந்தாலும் அந்த இன மக்களின் பூரண ஆதரவு இல்லாமல் மேற்கொள்ள முடியாது. ஒட்டுமொத்த மக்களும் விடுதலையென்ற பங்களிப்பினைச் செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு முன்வரும்போதுதான் விடுதலைக்கான மக்கள் புரட்சியும் அதன்மூலமான விடுதலையும் சாத்தியப்படும். என்று முளங்கிய தீயாக தீபன் திலீபனின் இறுதி நினைவுகளோடு......

**அவரது ஐந்து கோரிக்கைகள்...**

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறையில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களவர் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை "புனர்வாழ்வு" என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

4. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிலையங்கள் திறப்பதை உடனே நிறுத்த வேண்டும்.

5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோர்க்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப்பெற்று, தமிழ்க்கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள ராணுவ பொலீஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை உண்ணாவிரத மேடையில் பிரசாத் படிக்க, இதே கோரிக்கைகளை 13.08.1987 அன்று இந்தியத் தூதர் அலுவலகத்திற்கு அனுப்பி 24 மணி நேரம் ஆன நிலையில் தகுந்த தீர்வு கிடைக்காத காரணத்தால் சாகும் வரை உண்ணாவிரதம் மற்றும் சாலை மறியல் போராட்டம் நடத்த விடுதலைப்புலிகள் பிரதேசப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் (13.08.1987) தீர்மானிக்கப்பட்டது.

பிரபாகரனும் நிலைமையை விளக்கி தீட்சித்துக்குக் கடிதம் எழுதினார். ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலைவொட்டி உண்ணாவிரத மேடை அமைக்கப்பட்டிருந்தது. தாயற்ற திலீபனுக்கு நடுங்கும் கரத்துடன் வந்த ஒரு தாய் திருநீற்றைப் பூசினார். மாத்தையா திலீபனை உண்ணாவிரத மேடைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தார். அவர் அருகே மு. வ. யோ. வாஞ்சிநாதன், ராஜன், பிரசாத், சிறீ ஆகியோர் அமர்ந்தனர்.

திலீபனின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன் ஆகும். யாழ் மாவட்டத்திலுள்ள ஊரெழு என்னும் பனைமரங்கள் நிறைந்த கிராமத்தில், ஆசிரியர் இராசையா தம்பதியினருக்கு நாலாவது கடைக்குட்டி மகனாகப் பிறந்தார். மருத்துவ மாணவனாக இருக்கையில் பிரபாகரனைத் தலைவராக ஏற்று இயக்கத்தில் சேர்ந்தார்.

இவரது பணியில் திருப்தியுற்ற தளபதி கிட்டு பல்வேறு உயர்வுகளை அளித்தார். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக கிட்டுவின் பரிந்துரையின்படி பிரபாகரன் நியமித்தார்.

திலீபனின் முயற்சியால் விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் துணை அமைப்புகளாக 1.

1. தமிழீழ விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கம் (SOLT)
2. தமிழீழ மகளிர் அமைப்பு
3. சுதந்திரப்பறவைகள் அமைப்பு
4. தமிழீழ தேச பக்தர் அமைப்பு
5. தமிழீழ விழிப்புக்குழுக்கள்
6. தமிழீழக் கிராமிய நீதிமன்றங்கள்
7. சுதேச உற்பத்திக்குழுக்கள்
8. தமிழீழ ஒலி ஒளி சேவைக்கட்டுப்பாட்டுச் சபை
9. தமிழர் கலாசார சபை மற்றும் தொழிற்சங்கங்கள்

ஆகியவை உருவாக்கப்பட்டு பெரும் பாராட்டைப் பெற்றன.

அண்ணல் காந்தி, ஐரிஷ் நாட்டுப் போராட்ட வீரன் பாபி சாண்ட்ஸ், பொட்டி ஸ்ரீராமுலு போன்றோர் நீராகாரம் அருந்தித்தான் உண்ணாவிரதம் இருந்ததாகப் படித்திருக்கிறோம். ஆனால் திலீபன் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாத உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். விடுதலைப்புலிகள் இயக்கத் தலை-வர் வே. பிரபாகரன், தகவல் தொடர்பு சாதனங்கள் பறிக்கப்பட்டதைக் கண்டித்து சென்னையில் உண்ணாவிரதம் இருந்த போது ஒரு சொட்டு நீர் கூட அருந்தாத உண்ணாவிரதத்தையே மேற்கொண்டார். அவர் வழியில் திலீபன்.

பக்கத்தில் இருந்த மேடையில் பிரசாத் தலைமை ஏற்க, உண்ணாவிரதத்துக்கான காரணங்களை நடேசன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் விளக்கினார்கள்.

மேடையில் ஓர் இளைஞன், "திலீபன் அண்ணாவின் கோரிக்கைகள் மட்டுமல்ல தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான கோரிக்கை இது. தமிழீழம் தாருங்கள் என்று கூடக் கேட்கவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் என்று தான் அவர் கேட்கிறார் என்று பேசினார்.

அன்று இரவு பதினொரு மணியளவில் பிரபாகரன், திலீபனைப் பார்ப்பதற்காக வந்தார். அவருடன் சொர்ணம், இம்ரான், அஜீத், சங்கர், மாத்தையா, ஜானி என்று பலரும் வந்திருந்தனர்.

முதல் நாள் : இரவு நாடித் துடிப்பு 88, சுவாசத் துடிப்பு 20

இரண்டாம் நாள் : முகம் கழுவிக் கொண்டார், தலைவாரிக்கொண்டார், சிறு நீர் கழித்தார், மலம் போகவில்லை

மேடையில் கவிதைகள் முழங்கிக் கொண்டிருந்ததைக் கேட்ட திலீபன் "பேச வேண்டும் போலிருக்கிறது மைக் தாருங்கள்" என்றார்.

இரண்டு நிமிடத்துக்கு மேல் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் அவருக்கு மைக் வழங்கப்பட்டது.

"அன்பார்ந்த மக்களே!
என்னால் அதிகம் பேச முடியாது. ஆனாலும் உங்களுடன் பேச வேண்டும் போல் இருக்கிறது. உங்களைப் பார்க்கும் போது நீங்கள் தரும் ஆதரவைப் பார்க்கும் போது மகிழ்ச்சியடைகிறேன். எனது ஐந்து கோரிக்கைகளும் நிறைவேறும் மட்டும் ஒரு சொட்டு நீர் கூட அருந்த மாட்டேன். இது உறுதி! இதையே தலைவர்
பிரபாகரனிடமும் வலியுறுத்திக் கூறிவிட்டேன். இறக்க நேரிட்டால் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன். நான் இறந்ததும் விண்ணில் இருந்து அங்கேயுள்ள என் நண்பர்களுடன் சேர்ந்து தமிழீழம் மலரப்போகும் அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன். என்னால் அதிகம் பேச முடியவில்லை. என் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆர்வமுடன் கலந்து கொள்ளும் உங்களுக்கு என் நன்றிகள். வணக்கம்"

அவரது பேச்சைக் கேட்ட மக்கள் கண்ணீர் சிந்தினர். அன்று இரவும் பிரபாகரன் வந்தார்.
மூன்றாம் நாள் : "மலம் போக வேணும் போல தான் இருக்கு" என்றார் திலீபன்

“இறங்கி வாருங்கள்” உதவுகிறார் டாக்டர் வாஞ்சிநாதன்

“வேண்டாம் விடுங்க... நானே வருகிறேன்”.

சிறுநீர் கழியவில்லை... சிரமப்படுகிறார்.

“தண்ணீர்-குளுக்கோஸ் ஏதும் குடித்தால் தான் சிறுநீர் வரும்” என்கிறார் டாக்டர்.

“என்ன பகிடியா பண்ணுறீங்க - சொட்டுத் தண்ணீர் கூட குடிக்கமாட்டேன்” என்றார் திலீபன் உறுதியோடு.

ஒலி பெருக்கியில் காசி ஆனந்தன் கவிதைகள் முழக்கமிட்டுக் கொண்டிருந்தது.

மூன்றாம் நாள் நாடித்துடிப்பு 110. சுவாசத் துடிப்பு 24

நான்காம் நாள் : நாடித்துடிப்பு 120. சுவாசத் துடிப்பு 24

நாடித்துடிப்பு சாதாரணமாக 72-80ம், சுவாசத் துடிப்பு 16-22 ஆகவும் இருக்க வேண்டும். அதே நாள் இரவில் நாடித்துடிப்பு 114. சுவாசத்துடிப்பு 25.

1986ல் நடைபெற்ற ஒரு மோதலில் எதிரியின் குண்டை வயிற்றில் தாங்கியதால் திலீபனின் 14 அங்குலக் குடலை அகற்றிவிட்டார்கள். அப்போது மூன்று மாதம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றார். அந்தக் காரணமும் இப்போது சேர்ந்து அவருக்கு வயிற்றில் வலி எழுந்தது.

ஐந்தாம் நாள், ஆறாம் நாள் : கொழும்பிலிருந்து இந்தியத் தூதுவர் அலுவலகத்தில் இருந்து முக்கிய நபர் வரப்போவதாகச் செய்தி கசிந்தது.

கிட்டுவின் தாயார் ராஜலட்சுமி அம்மாள் உண்ணாவிரத மேடைக்கு வந்து
திலீபனை அணைத்து வாழ்த்தும் வேளையில் அவரது அழுகை நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

அன்று மாலை யாழ்க்கோட்டை ராணுவ முகாம் பொறுப்பாளர் ஜெனரல் பாரா,
திலீபனைப் பார்க்க வந்தார். பிரிகேடியர் ஃபெர்னான்டோ உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து சிங்களக் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தினார்.
ஆறாம் நாள் : தளபதி சூசை, பிரபா, ரகு அப்பா, தளபதி புலேந்திரன், தளபதி ஜானி ஆகியோர் வந்து திலீபனின் தலையை வருடி கண் கலங்கிச் சென்றனர்.

“கிட்டு அண்ணனைப் பார்க்க வேண்டும்” திலீபன் கோரிக்கை வைத்தார். அவர் அப்போது சென்னையில் இருந்தார். மாலை ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காராவும் அவரது கட்சியினரும் வந்து பார்த்தனர்.

யாழ்ப்பாணம் வந்த இந்திய உதவித் தூதுவர் நிருபம் சென் முகாமில் புலிகளின் பிரதிநிதிகளிடம், "உண்ணாவிரதப் போராட்டங்களால் இந்தியாவை நிர்ப்பந்திக்க முடியாது" என்று எச்சரித்துவிட்டுச் சென்றார்.

ஏழாம் நாள் : கூட்டம் லட்சக்கணக்கில் சேர்ந்துவிட்டதால் வெயிலைத் தாக்குப்பிடிக்க கொட்டகை போடும் வேலை நடந்தது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பல இடங்களில் திலீபன் உண்ணாவிரதத்தை ஆதரித்து அடையாள உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ரத்த அழுத்தம் 80/50
நாடித் துடிப்பு 140
சுவாசம் 24

இந்திய அமைதிப்படையினர் விடுதலைப்புலிகளைச் சந்தித்தனர். இவர்கள் சிங்களப் பொலீசாருக்குப் பதில் இந்திய மத்திய ரிசர்வ் பொலீஸ் படையைக் கொண்டு வருவது குறித்து பேசிச் சென்றார்கள். உண்ணாவிரதம் குறித்து எதுவும் பேசவில்லை.

ஒன்பதாம் நாள் : இந்திய அமைதிப்படையின் தலைவர் லெப்டினனட் ஜெனரல் தீபிந்தர் சிங் ஹெலிகாப்டரில் யாழ் பல்கலை மைதானம் வந்தார். பிரபாகரனைச் சந்தித்தார். இருவரும் தனித்தனி வாகனங்களில் புறப்பட்டு யாழ் கோட்டை ராணுவ முகாம் சென்றனர். பேச்சுவார்தையில் பலன் எதுவுமில்லை.

தொடர்ந்து அதே நாளில் பிற்பகல் 1.30 மணிக்கு இந்தியத்தூதர் ஜே. என். தீட்சித் பிரபாகரன் சந்திப்பு நடந்தது. பேச்சுவார்த்தையில் தீபிந்தர் சிங், ஹர்கிரத் சிங், பிரிகேடியர் ஃபெர்னாண்டஸ், கேப்டன் குப்தா மற்றும் புலிகள் தரப்பில் மாத்தையா, செ. கோடீஸ்வரன் (வழக்கறிஞர்), அன்ரன் பாலசிங்கம், சிவானந்த சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்தையில் தூதர் உறுதிமொழி மட்டுமே அளித்தார். உண்ணாவிரதம் நிறுத்தப்படுவது குறித்து ஏதும் பேசவில்லை.

பத்தாம் நாள் : திலீபனின் கை, கால்கள் அசைவின்றி சோர்ந்து கிடந்தன.

நாடித்துடிப்பு 52.
இரத்த அழுத்தம் 80/50

சராசரி மனிதனின் அளவுகளை விட அனைத்தும் குறைந்துவிட்டன. இனி திலீபனுக்கு எந்த நிமிடமும் எதுவும் நேரலாம்.

நோர்வே, ஸ்வீடன், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா நாட்டுத் தூதுவர்கள் வந்து திலீபனைப் பாரத்துச் சென்றார்கள்.

பதினோராம் நாள் : கோமாவுக்கு முந்தைய நிலையில் உடல் அங்குமிங்கும் அசைவது போல திலீபனின் உடல் அவரையறியாமலே புரளத் தொடங்கியது.

யாழ் மாவட்டத்தில் அனைத்து நிறுவனங்களும் உண்ணாவிரதத்தில் பங்கேற்கப் போவதாக அறிவித்தன. “நிதர்சனம் டிவி” கடந்த பத்து நாட்களாக உண்ணாவிரதச் செய்தியைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருந்தது. பன்னிரண்டாம் நாளில் திலீபனின் உடல் நிலை மோசமாகிவிட்டது என்ற செய்தி யாழ் பகுதி முழுவதும் பரவியது.

265 மணி நேரம், நீரின்றி சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கி தனது சுய நினைவு தப்பினாலும் குளுக்கோஸ், நீர் தந்துவிடாதீர்கள் என்று கூடியிருந்தோரிடம் சத்தியவாக்கு வாங்கிக்கொண்டு புழுவாய்த் துடித்த திலீபனின் உயிர் 26.09.1987 காலை 10.48 மணிக்குப் பிரிந்தது.

எங்கும் அழுகை... விம்மல் ... இலங்கை இந்தியா எதிர்ப்புக் குரல் எழுந்தது.

எம்பார்ம் செய்ய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட உடல், பிற்பகல் 4.15 மணியளவில் மக்களது அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ஈரோஸ் தலைவர் பாலகுமார், பழ.நெடுமாறன், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் கலங்கி அழுதனர். பிரபாகரன் உள்ளிட்ட புலிகள் இயக்கத்தினர் இறுதி அஞ்சலி செலுத்தினர். மனிதநேயம் தழைக்கும் இடத்தில் தான் அகிம்சை வெல்லும் என்பது திலீபன் மரணம் மூலம் உலகுக்கு உணர்த்தப்பட்டது.

- தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை -

---

நான் எப்போதும் பேச்சுக்குத்தருவது குறைந்தளவு முக்கியத்துவமே
செயல் வளர்ந்த பின்பு தான் நாம் பேசத் தொடங்க வேண்டும்.

- மேதகு வே. பிரபாகரன் -
தமிழீழத் தேசியத் தலைவர்

# வன்னியில் இருந்து ஒரு மடல்

அன்புள்ள அப்பாவுக்கு
உங்கள் பாசத்துக்குரிய
பத்து வயது மகளின்
கண்ணீர் கடிதம் இது..
கனடாவில்
இப்ப என்ன நேரமெண்டு
எனக்குதெரியாதப்பா
ஆனால் எங்களுக்கு இப்ப
கெட்ட நேரந்தானப்பா...
இடிமுழக்கம் கேட்டதுண்டு
இப்படி வெடிமுழக்கம்
கேட்டதில்லையப்பா...
குண்டுச் சத்தம்
காதைப் பிழக்கிறது அப்பா...
சமாதான காலத்தில்
உங்கள் பசுமையான
நினைவுகளைத் தந்தீர்கள் அப்பா
இனி நீங்கள் வரும்போது
நாங்கள்...
எங்கே...
எப்படி..இருப்போமா...
அல்லது...
நெஞ்சு கனக்கிறது அப்பா...
பள்ளிக்கூடமெல்லாம்
சனத்திரளால்
நிரம்பி வழிகிறது.
காலைக்கடன் கழிக்கக்கூட
இடமில்லையப்பா...
நடந்து நடந்து என்
பிஞ்சுக்கால்கள்
மரத்துவிட்டன அப்பா.
அடுத்த அடி எங்கு விழும்
அடுத்து நாங்கள்
எங்கு போவோம்
தெரியாது விழி
பிதுங்குகிறோமப்பா
அப்பா நீங்கள்
முதல்முறை வந்தபோது
நட்ட தென்னைமரம்
குலை தள்ளியபோது
நாங்களும் நடைப்பிணமாக
இனி இழப்பதற்கு
எதுவுமில்லை அப்பா...
மரத்தடியின்
தறப்பாளில்தான்
இப்ப எங்கள் வீடப்பா
அம்மாக்கு வந்த மலேரியா
இப்ப பரவாயில்லையப்பா
ஆஸ்பத்திரியிலை
மருந்தில்லை
போகவும் முடியலை
செல்லடி அகோரம்
ஆஸ்பத்திரியும் அகதியாகி
அரும்பொட்டு காணிக்குள்ள...
அப்பா நானிப்ப
பழஞ்சோறு சாப்பிடவும்
பழகிட்டனப்பா...
குப்பைக் கீரையும்
சோறும் சம்பலும்
நல்லாய்தான் இருக்கிறதப்பா
பசி வயித்தை குடையும்போது
ருசி தேவையில்லை தானேயப்பா...
அப்பா ஐ.நா என்டு
ஒரு அமைப்பிருக்காம்
உங்களுக்கு பக்கமெண்டால்
ஒருக்கால்
கதைச்சு பாருங்கோவன்
போன வெள்ளைக்காரனையும்
சிலுவைக் கொடியையும்
வன்னிக்கு அனுப்பச்சொல்லி
முடிஞ்சால் ஒரு
மனுக் குடுங்கோவன் அப்பா...
தவிச்சவாய்க்கு
தண்ணி குடுக்கிறதும்
பசிச்ச வயிறுக்கு
பழஞ்சோறாவது போடுறதும்
புண்ணியந்தானேயப்பா...

**- சிங்கம் -**

# ஐ.நா எனும் நாடக மேடை

இந்தியா, அமெரிக்கா ஐரோப்பியமற்றும் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் உதவியுடன் ஈழத்தமிழர்களை பகிரங்கமாக இனப்படுகொலை செய்தது இலங்கை அரசு. எப்படியோ சில படுகொலை ஆதாரங்கள் வெளிவந்த நிலையில் இனப்படுகொலை செய்த இலங்கை அரசையே அமெரிக்கமேற்குலக நாடுகளின் பிராந்திய நலனைப் போதிக்கும் நிறுவனமான ஐ.நா ஒரு அறிக்கையைத் தயார் செய்யச் சொல்லியது தம் மேல் எந்தக் குற்றமும் வராதவாறு மகிந்தராஜபக்ஷ அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எனும் ஒரு பூச்சாண்டி அறிக்கையை தயார் செய்தார்கள். அதனை ஐ.நாவின் பார்வைக்கு அனுப்பிய அதே நேரம் இந்திய, அமெரிக்க அரசு களின் ஆலோசனைப் படி சில முக்கிய பகுதிகளை வேண்டுமென்றே இலங்கை அரசு கசியவிட்டு பரபரப்பேற்படுத்தியது. அந்த அறிக்கையை சர்வதேச மன்னிப்புச்சபை ஐ.நா மனித உரிமை ஆணையகம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் இதர மனித உரிமை அமைப்புகள் எல்லாம் எதிர்த்தன இந்த அறிக்கையைச் செயற்படுத்துவதால் தமிழர்களுக்கு உரிய நீதியோ தீர்வோ கிடைக்காது என்றும் இதனைச் சரியான ஓர் அறிக்கையாக எடுத்துக் கொள்ள முடியாது என்றும் தமது கடுமையான ஆட்சேபத்தை வெளியிட்டன. இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலையின் சூத்திரதாரிகளான அமெரிக்க இந்திய மேற்குலக கூட்டணியால் அதைப் பொறுக்க முடியவில்லை, நீ கவலைப் படாதே நண்பா நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று இலங்கை அரசைத் தேற்றி விட்டு அனைத்து மனித உரிமை அமைப்புகளும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்ன 'அதே அறிக்கையை' அமெரிக்க இந்திய மேற்குலகக் கூட்டணி ஐ.நாவில் வாக்கெடுப்புக்கு விட்டன. அதற்காக அமெரிக்காவுக்கு எதிராக சிங்கள

தேசியவாதக் கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதும் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதா எதிராக வாக்களிப்பதா என இந்தியா மூளையைப் போட்டு கசக்கியது போலக் காட்டியதும் நாடகத்தின் ஈழத் தமிழர்களுக்கு நீதி வாங்கிக் கொடுப்பதாக ஐ.நாவில் போடப்பட்ட நாடகத்தின் கிளைமாக்ஸ்சாக சில வாக்குகளால் இலங்கை அரசுக்கு எதிரான(ஆதரவான) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசு தயாரித்த அதே அறிக்கையை சர்வதேச ஒத்துழைப்புடன் இலங்கையே செயற்படுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டது. 'மாட்டுக்கு மாடு சொன்னாக் கேக்காது மணி கட்டின மாடு சொன்னாத் தான் கேக்கும்' என்பதற்கிணங்க இலங்கை அரசு அறிக்கையை நீட்டிய போது ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்ன மனித உரிமை அமைப்புகள் ஐ.நாவில் வைத்து அதே அறிக்கையை வல்லாதிக்கம் நீட்டிய போது

ஏற்றுக் கொண்டு வரவேற்புத் தெரிவித்தன. இந்த நிகழ்வை பார்த்த அப்பாவித் தமிழன் தமக்கு நீதி கிடைத்து விட்டதாக நினைத்து இனிப்புக் கொடுத்து மகிழ்ந்தான். அந்த நாடகத்தின் இரண்டாம் பாகம் தான் இப்போது ஐ.நாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இதன் முடிவிலும் நாங்கள் இனிப்புக் கொடுத்து எமக்கு நாமே சபாஷ் என்று தட்டிக் கொள்ளலாம். இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை மறைத்து போர்க்குற்றம் என்ற சொல்லுக்குள் அமெரிக்க இந்திய மேற்குலக நாடுகள் ஏன் எம்முடைய போராட்டத்தை முடக்கிவிடப் பார்க்கின்றன என்பதனை நாம் அவதானிக்க வேண்டும். போர்க்குற்றம் என்று வருமிடத்து போர் சரியானது அதில் சில குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதோடு முடிந்து விடும். இத்தனை உயிர்களைக் கொடுத்து 60 வருடமாக நாம் எதற்குப் போராடினோமோ அதற்கான விடை கிடைக்காது தமிழர்களுக்கான குறைந்த பட்ச அரசியல் உரிமைகள் கூட போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுவதால் கிடைக்கப் போவதில்லை. அதில் 'மிகச்சிலவேளை' போரில் ஈடுபட்ட சரத்பொன்சேகாவின் விசுவாசிகளான சில அதிகாரிகள் பலி கொடுக்கப்படலாமே தவிர அதனால் எமக்கான குறைந்த பட்ச நீதி கூடக் கிடைக்காது அதே நேரம் தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் போர்க்குற்றத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அறிக்கை சொல்வதால் போர்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் என்று ஏற்கனவே இலங்கை அரசால் குற்றம் சாட்டப்பட்டு பலிகொடுக்க தயாராக வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு முதலில்அதற்கான உயர்ந்தபட்ச தண்டனை வழங்கப்படலாம் என்பதுடன் இறுதி யுத்தத்தில் தப்பி வந்து வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள புலிகள் அமைப்பின் முக்கிய போராளிகளும் அந்தந்த நாட்டு அரசாங்கங்களால் போர்க்குற்றவாளிகள் என்று கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படலாம். இலங்கை அரசு சம்மதித்தால் மட்டுமே போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினரை சர்வதேசத்தால் ஒரு பெயருக்கெனினும் தண்டிக்க முடியும் ஆனால் எஞ்சியுள்ள விடுதலைப்புலிகளின் நிலமை அதுவல்ல, விரும்பிய நேரத்தில் இலங்கை அரசும் சரி சர்வதேசமும் சரி சட்டப் போர்வையில் தாங்கள் விரும்பிய நேரத்தில் தண்டனை வழங்கலாம் மீண்டுமொரு விடுதலைப் போராட்டம் விரைவாகக் கட்டமைக்கப்படுவதை சர்வதேசம் விரும்பாதென்பதால் இறுதிப் போரில் தப்பி எஞ்சியுள்ள முக்கிய போராளிகளையும் துடைத்தழிப்பதற்காகவே இனப்படுகொலை என்பதை மறைத்து சர்வதேசம் போர்க்குற்றம் என்ற இலங்கை அரசுக்கு சாதகமான ஆயுதத்தைக் கையில் எடுத்திருப்பதாகவே நான் சந்தேகிக்கிறேன். அத்துடன் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று உறுதிப்படுத்தப்பட்டால் ஒரு காலத்திலாவது நாம் தனியானதொரு தேசமாக பிரிந்து போவதற்குரிய சட்டரீதியான அங்கீகாரம் எமக்குக் கிடைத்து விடும்என்பதால்சர்வதேசம்ஒருபோதுமேஇலங்கையில்நடந்ததுதமிழினப்படுகொலை என்பதை ஏற்றுக்கொள்ளாது அப்படிச் சொல்லவும் எந்த ஒரு அமைப்பையும் விடாது.

புலம்பெயர் தேசங்களில் போர்க்குற்ற மாநாடு என்ற அளவோடு சில அமைப்புகள் தமது செயற்பாட்டை நிறுத்திக் கொள்வதும் இதன் பின்னணியில் தான். ஈழத் தமிழர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கும் பொருட்டு எதிர்வரும் வாரம் எழுபதுக்கு மேற்பட்ட இந்திய அரசியல்வாதிகள் பிரித்தானியாவுக்கு வருவதும் ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை அரசின் அறிக்கையை விரைவாக நிறைவேற்றவும் இதே சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் பொருட்டும் தானே நடந்தது தவிர இனப்படுகொலை என்பதை வலியுறுத்த அல்ல.பலமே உலக ஒழுங்கையும் நீதியையும் தீர்மானிக்கிறது எனவே நாமாகவே சுயமாகப் போராடி விடுதலை அடைந்தாலே தவிர வேறு எந்த கடவுளும் எமக்கு தாமாக மனமிரங்கி வந்து விடுதலை தரப்போவதில்லை. அவரவர்க்குத்தேவையெனில் அவரவர்கள் விழித்திருப்பர். நமக்குத் தேவையெனில் நாமும் விழித்திருப்போம்.

"திரு"

# நினைவுகளின் பிடியில்



விடிய எழும்பினத்தில இருந்து மாடியில் இருந்து எப்போதும் வரும் அப்பையாண்ணையின் சத்தத்தை காணவில்லையே என ஜோசித்தபடி அம்மாவிடம் "என்னம்மா அப்பையாண்ணை இன்னும் எழும்பவில்ல போல ... சத்தத்தையே காணோம் ? எனக் கேட்டேன் தேத்தண்ணியை குடித்தபடி ...

நீ கும்பகர்ணன் மாதிரி கிடப்ப .. இரவு என்ன நடந்தது தெரியுமே பிள்ள ..அவருக்கு ஏலாம போயிட்டுது. இங்க அக்கம் பக்கத்தில இருக்கிற எல்லோரும் சேர்ந்து தான் ஆஸ்பத்திரியில சேர்த்தது ..

ஐயோ ஏனம்மா என்னை எழுப்பி இருக்கலாம் தானே .. பாவம் தனிய அங்க என்ன செய்கினமோ ... நான் போகட்டே ...?

வேண்டாம் பிள்ள ... அண்ணை இராத்திரி அவரோடதான் போனவன் .. அவன் அங்க நிக்கிறான் தானே ...நான் அப்பாட்ட சாப்பாடு குடுத்து விடுறன் ..நீ படிக்கப் போ .. என சொல்லியபடி சமையல் வேலையில் மும்மரமானார் .
கல்லூரிக்கு வெளிக்கிட்டு போனாலும் அப்பையாண்ணையின் நினைவுகள் துரத்திக் கொண்டு இருந்தன ..

பாவம் அப்பையாண்ணை .. 70 வயசு இருக்கும் ...
அம்மா, அப்பா அப்பையாண்ணை என கூப்பிட நாங்களும் அப்படியேதான் கூப்பிடுறதும் .. தூரத்து சொந்தமாம் அப்பாவுக்கு ..

நல்ல வசதியாய் காணி பூமி என்று வாழ்ந்தவராம் .. நாங்க இங்கால வெளிக்கிட அவர் தான் மண்ணை விட்டு விட்டு வர மாட்டன் என்று இருந்த மனுசனாம் … நாங்க சின்ன பிள்ளையளா இருக்கேக்கை அம்மா,அப்பாவுக்கு நிறைய உதவி செய்தவராம் …

"செய் நன்றி மறக்க கூடாது அந்த மனுஷன் செய்த உதவிகளுக்கு நாம கடன் பட்டு இருக்கிறம்" என அம்மா அடிக்கடி சொல்லக் கேட்டு இருக்கிறேன். அவர் மகன் "அவரையும் அவர் மனைவியையும் வெளியில் எடுக்கப் போவதாயும் அதுவரை அவர்களை பார்த்துக் கொள்ள முடியுமா ?" என கேட்ட நாளில் இருந்து அம்மாவின் சந்தோசத்தால் அவரைப் பார்க்க வேணும் என ஆவல் கூடி இருந்தது எங்களுக்கு.

அவர் வந்த போது அவரைப் பார்த்து அம்மா அழுது விட்டா ..பிறகு ஏன் என்று நானும் அண்ணாவும் விசாரிக்க சொன்னா .. " ராஜா மாதிரி இருக்கும் மனுஷன் ..வெள்ளை வேட்டி சட்டையில பிரம்புப் பிடியோட நடப்பார் .. அந்த பிரம்பு சத்தமே எதோ தேர்பூட்டி வாற ராஜா மாதிரி தான் இருக்கும். எத்தனை வேலை ஆள் அவர் தோட்டத்தில இருப்பினம் தெரியுமே ..அவர் துப்பாக்கி எல்லாம் வைத்து இருந்தவர் வேட்டைக்கு போனா எங்களுக்கு எல்லாம் கொண்டாட்டம் தான் மான் கறி பண்டிக்கறி எல்லாம் கொண்டு வந்து தருவார் .. நல்ல மனுஷன் . உதவி என்று போன, வெறும் கையோட திருப்பி அனுப்பாது .. அவற்ற பொஞ்சாதி மட்டும் என்ன குறைச்சலே .. பெயர் மாதிரியே குணமும் தங்கம் ..எப்பவும் நாலு படி அரிசி கூட வேகுமாம் … வாறவங்களுக்கு சாப்பாடு போட இப்ப பார் எழும்பும் தோலுமாய் இந்த கோலத்தில பார்க்க என்னையும் அறியாமல் கண்ணீர் வந்திட்டுது.." எனச் சொல்லிக் கொண்டு எழுந்து போனார் .. அதுக்கு பிறகு எங்களுக்கும் நல்ல மரியாதையை வந்திட்டுது அவர் மேல …

அவர் ஊரில நடந்தது ‘காம்ப்’ நடந்த கொடுமைகள் எல்லாம் சொல்ல சொல்ல அழுகை வரும் .. கடைசி நேரத்தில சனத்தோட சனமா அள்ளுப் பட்டது சொல்லும் போது குரல் தழுதழுக்க மேல சொல்ல முடியாமல் கஷ்டப் படுவார். நானும் அவரா மேல சொல்லட்டும் எனப் பார்த்து விட்டு நேரம் போக எழும்பி வருவன்.

எங்கயோ வெறித்துப் பார்த்தபடி இருக்கும் நேரங்களில் கண்கள் கசிந்து இருப்பதை பார்த்து இருக்கிறன் ..அம்மாவிடம் சொன்ன போது "பாவம்டி எப்படி எல்லாம் இருந்த மனுஷன் .. எல்லாத்தயும் இழந்து போட்டு வாறது ஏன்டா எவ்வளவு கஷ்டம் .. நீ போய் எதுவும் கதைத்துக் கொண்டு இரு "என சொல்லி அனுப்புவா ..

ஆனால் கொஞ்ச நாளாவே அவர் கதை குறைய தொடங்கியது .. எப்போதும் வாயிக்குள் ஏதோ முணுமுணுத்த படி …. கண்கள் அலைக்கழிய முகட்டு விட்டத்தை

வெறித்தபடி ஏதோ சொல்ல முடியாமல் அவர் படும் அவஸ்தையை பார்க்க கஸ்ரமாக இருக்கும் ..அப்பா எவ்வளவோ கதை குடுத்தும் அவர் நினைவுகள் ஒரு இடத்தில் இருந்து திரும்பி
வராதது போல தனக்குள்ளேயே கதைக்க தொடங்கினார்.

அவர் சொல்லாது விட்ட கதைகளை அவர் மனைவியிடம் போய் கேட்போம்.
அவா அழுது கொண்டுதான் சொல்லுவா.

கடைசி நேரத்தில அத்தனை குண்டுக்கும் ஷெல் அடிக்கும் மத்தியில பதுங்குகுழிதான் எந்நேரமும்..

சுத்தி வர எங்க பார்த்தாலும் பிணக்காடாம்.. எங்க பார்த்தாலும் ரத்த வெள்ளமாம் . செத்தவர் காயம் பட்டவர் எல்லாம் வழி நெடுக்க கிடந்தவினமாம் எங்க பார்த்தாலும் ஒரே அலறல் சத்தமாம் ..
சரியான சாப்பாடோ மருந்து வசதியோ இல்லையாம் ..
அதை கேட்டு விட்டு நான் இரவு முழுக்க அழுதனான் … எத்தனை சின்ன பிள்ளைகள் இருந்து இருப்பினம் ? அவேள் எல்லாம் என்ன பாவம் செய்ததுகள்?

அப்பையாண்ணை கடைசி வரை தன்ர ஊர விட்டிட்டு வர மாட்டன் என்று இருந்தவராம் .. இவாதான் காலிலை விழுந்து அழுது கூட்டிக் கொண்டு வந்து இருக்கிறா . கடைசி நேரம் இவாக்கு காயம் பட்டு விட்டதாம் ..அதுக்கு பிறகுதான் சனங்களோட சேர்ந்து இராணுவப் பகுதிக்கு போக சம்மதித்தவராம் .

"நான் தப்பு செய்து போட்டேனே … என்ர பரமேஸ்வரி என்னை மன்னிக்க மாட்டாள் இந்த பாவிக்கு நரகம் தான்…"பாவம் அந்த சின்ன பிள்ளை ! இப்ப உயி-ரோட இருக்குதோ இல்ல ..எந்த நாய் நரி சாப்பிடுதுகளோ தெரியல்லையே .. இந்தப் பாவிக்கு எப்படி மனம் வந்தது பார்த்து விட்டு விடு ஓடி வர.. இன்னும் நான் உயிரோட இருக்கணுமா ? எனக்கு நல்ல சாவே வராது …" என்னும் புலம்பல் அடிக்கடி அவர் வாயில் இருந்து வரத் தொடங்கியது . அந்த நேரங்களில் அவர் மனைவி
" நீங்க என்னப்பா செய்விங்க ? என்னை கூட்டிக் கொண்டு வருவிங்களா ? இல்ல அவேளைப் பார்ப்பிங்களா ? அவையளுக்கு எதுவும் நடந்திருக்காது … நீங்க யோசிக்காதீங்கோ .. " என சொல்லி அவரை தேற்றுவதை கண்டிருக்கிறேன் .

கல்லூரி முடிந்து வர ஆரவாரப் பட்டுக் கொண்டு இருந்தது வீடு…
"என்னம்மா என்னாச்சு ? அப்பையாண்ணை சுகம் தானே ?
"இல்ல பிள்ள அவருக்கு அங்க சுயநினைவு இல்லையாம்..அப்பா இப்ப தான் கதைத்தவர் .. ஆஸ்பத்திரியிலே தான். நீயும் வா ..போய் பார்த்து விட்டு வருவம் .. பாவம் அந்த மனுஷி ஒரே அழுது கொண்டு இருக்குதாம் " என சொல்ல அவசரமாக ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தோம் .

அறை வாசலில் அப்பா கவலையோடு நிற்கிறார் ."என்னப்பா என்னாச்சு?" என கேட்க அப்பாவோ "அப்பையாண்ணைக்கு புத்தி பேதலிச்ச மாதிரி இருக்கு யாரையும் நினைவு இல்ல இப்ப தான் டாக்டர் பார்த்து விட்டு போறார். தன் பாட்டுக்கு ஏதோ முணுமுணுத்துக் கொண்டு இருக்கிறார். அவா அழுது கொண்டு இருக்கிறா நீ போய் பார் " என அம்மாவை அனுப்பினார். நான் மெல்ல நகர்ந்து அப்பையாண்ணை படுத்து இருக்கும் அறைக்குள் நுழைந்தேன். கசக்கி போட்ட காகிதம் போல கட்டிலில் படுத்துக் கிடக்கும் அவரை பார்க்க முடியவில்லை. கண்ணின் ஓரமாக கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது .

கதவை திறந்து கொண்டு வெளியே வர "யாருக்கும் எந்த தீங்கும் செய்ய நினைத்து பார்த்திருப்போமா எல்லோருக்கும் அள்ளி அள்ளி குடுத்த மனுஷனுக்கு எப்படி ஒரு நிலைமையா ?.. இப்படி எல்லாம் சீரழிய வேண்டி இருக்குதே! இதுக்கு அங்கேயே கிடந்தது செத்துப் போயிருக்கலாமே.." என்னும் குரல் அழுகையோடு வந்து கொண்டு இருந்தது ..

"கண்ணுக்கு முன்னால ஒரு தாய்க்கு ஷெல் பட்டு நல்ல காயமாம் தவண்டபடியே "என்ர பிள்ளையையாவது காப்பாத்துங்கோ" எடுத்துக் கொண்டு போங்கோ" என்று கெஞ்சினவாவாம் இவர் அந்த நேர அவசரத்திலையும் தன்ர மனுஷியை எப்படியாவது காப்பத்தனும் என்று அந்த பிள்ளைய அங்கேயே விட்டு விட்டு வந்திட்டாராம் .கேம்பில் வைச்சுத்தான் இதை பிறகு மனுஷிக்கு சொன்னவராம் .. அந்த கவலைதான் இப்ப அவரை பாடாப்படுத்துது போல ... "என அம்மாவிடம் சொல்லிக் கொண்டு இருந்தார் ..

அம்மாவின் ராஜா வேச அப்பையாண்ணை மெல்ல கலைந்து கொண்டு இருந்தார் எனக்குள் ... அந்த முகம் தெரியா குழந்தை தேவ தூதுவனைப் போல இப்போது அப்பையாண்ணையின் கட்டிலின் மேல் பறப்பதாக தேன்றியது....

இனி சத்தமாய் ஒலிக்கக் கூடும் அந்த நான்கு சுவர்களுக்குள் அப்பையாண்ணையின் குரல் ..

**- ஈழத்து சிநேகிதி -**

**மொழி, கலை, கலாச்சாரம் என்பன ஒரு தேசிய இனத்தின்**
**கட்டமைப்பிற்கு தூண்களாக விளங்குகின்றன**
**ஒரு தேசியத்தின் ஆண்மாவாக திகழ்கின்றன**
**ஒரு தேசிய நாகரீகத்திற்கு அத்திவாரமாகின்றன.**

- வே. பிரபாகரன் -

# இனம் மாறும் தமிழர்கள்.




பாரிய வரலாற்றுப்பின்னணியை கொண்ட ஓர் தமிழ் இனம் கால ஓட்டத்துக்குள் மாற்றத்தை சந்தித்துக்கொண்டே போகின்றது அதன் அடிப்படை என்ன என்று ஆராய்வதற்குள் "இனம்" என்ற பதத்தை உயிரியல் அடிப்படையில் விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒரே இயல்புடைய உயிரிகள் தங்களுக்குள் கலந்து இளம் உயிரினங்களை உருவாக்கக் கூடிய ஒரு தொகுதி அது கால நிலை இருக்கும் சூழல் என்பதன் அடிப்படையில் வெளிப்படையான வேறு-பாடுகளுடன் தங்களுக்குரிய இயல்போடு ஒன்றித் தங்களுக்குரிய சூழலில் வாழும் உயிரிகள். இங்கு தான் தமிழராகிய நாம் எங்கள் அடையாளங்களை அதன் வரலாற்றுப் பயணத்தின் பின்னணியில் இருந்து எங்களுக்குரிய இயல்புகளை இனங்கண்டு அது கால ஓட்டத்தில் எவ்வாறு மாறுதல்களை கண்டு செல்கின்றது என்று உற்று நோக்கவேண்டும். நாங்கள் ஈழத்தமிழர்கள் என்ற அடிப்படையில் எங்கள் இயல்பின் தனித்தன்மையை மொழி, கலாச்சாரம், வரலாறு, இலக்கியம், உணவு, அரசியல் என்ற பெரும் பிரிவுகளுக்குள் ஆராய்ந்து இன்றைய உலக மயமாக்கப்பட்ட சூழல் அதன் தாற்பரியத்தில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தி எதிர்காலத்தில் எவ்வாறான இன அழிவை ஏற்படுத்தப்போகிறது என்பது எல்லா தமிழ் இன ஆர்வளர்" களின் ஐயமே. அதன் ஐயத்தில் தான் எமக்கான அரசியல் தேவையை நாம் உணரவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

## மொழி

எம் இனத்தின் அடையாளம். இதன் அழிப்பில் எதிரிகளின் தாக்கம் ஒருபக்கம் இருக்க. நாமே தாய் மொழியில் பேசுவதை ஒரு தரக்குறைவாக நினைத்துமொழியை பேசுவதில் இருந்தும் அதை எம் பிள்ளைகளுக்கு கற்பிப்பதிலும் இருந்து விலகி நிற்கின்றோம். உண்மையில் தாய்மொழியில் சிந்திக்காத எவனும் முழுமையான அறிவைப்பெறமுடியாது. இது அறிவியல் உண்மை. அது போக மொழி என்பது அறிவல்ல. எம்மை அடையாளப்படுத்தி, தகவலை சரியானமுறையில் கொண்டு சேர்க்கும் சிறந்த ஊடகம். தகவல் பரிமாற்றம் எங்ளை அறியாமலே நடைபெறும். அடையாளப்படுத்தலைத்தான் நாம் கட்டாயம் பாதுகாக்கவேண்டும்.அதற்கு முதலில் தமிழில்பேசி எம்குழந்தைகளுக்கு தமிழ்கற்பிக்க வேண்டும். தவறின் எதிரியின்

வீச்சில் சிங்களமும். உலகத்தின் வீச்சில் ஆங்கிலமும் குடியேறிவிடும். இதன் மூலம் எம் இன அழிப்புக்கு எதிரியைவிட நாமே பெரும் காரணமாகிவிடுவோம்.

## கலாச்சாரம்

கலாச்சாரத்திற்கும் காலத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. உண்மையில் காலம் தான் கலாச்சாரத்தை கைப்பிடித்துக்கொண்டு வருகின்றது என்று சொல்லவேண்டும். அதில் காலத்தோடு சேர்ந்து நாம் எமது கலாச்சாரத்தை கைபிடித்து வரவேண்டும். அது கூட ஒருவகையில் எம்மினத்தை காப்பதற்கான பெரும் பொறுப்பு. வர்த்தகமயமாக்கலின் விளம்பர உத்திகளால் இரசனைகளும் தேவையும் போட்டிபோட்டுக்கொண்டு இருக்கும்பொழுது ஒவ்வொரு பெற்றோர்களும் நுட்பமான முறையில் பிள்ளைகளுக்கு நமது கலாச்சாரத்தை உட்புகுத்தவேண்டும். எதிரி தன் பங்கிற்கு அதையும் சீர்கெடுக்கத் தொடங்கி விட்டான் என்பது யாவரும் அறிந்ததே. அதன் பலன்களை சிறிது சிறிதாக அனுபவிக்கின்றோம். திருமணங்கள். கருக்கலைப்புக்கள் போதைப் பொருள்ப்பாவனை, விபச்சாரம் என்று வகைப்படுத்திக் கொண்டே போகலாம். எதிரி கெட்டதை புகுத்தும் வேகம் நாங்கள் நல்லதை புகுத்த எடுக்கவில்லையோ என எண்ணத்தோன்றுகிறது.

## வரலாறு

பள்ளிப்பாடத்திட்டங்கள் தொடக்கம் கட்டப்படும் அடையாள சின்னங்கள் வரை சிங்களத்தின் தாக்கம் நீண்டு கொண்டே போகின்றது. அந்தவேகத்திற்கு எம்மில் சிலரும் அற்க ஊதுகுழலாக இருக்கிறார்கள். இந்நிலைமை காலப்போக்கில் எம்மாதிரியான ஓர் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சாதாரணமான உண்மை உள்ள ஈழத்தமிழன் யாவரும் சிந்தித்து இதில் இருந்து சரியான ஒரு வரலாற்றை நாம் புரிந்து அதை எம் இளம் தலைமுறைக்கு கற்பிக்க வேண்டியதேவை உள்ளது. அதன் பயன் காலத்தால் எம் உண்மை வரலாறு காக்கப்படும்.தவரின் கானல் நீராய்ப் போய்விடும்

## இலக்கியம்

இலக்கியத்தை காலத்தின் கண்ணாடி என்றே கூறவேண்டும். அது அந்தந்தக் கால நிலைமைகள். எதிர்காலத்தின் தேவைகள் என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது இலங்கைத் தமிழரின் இலக்கியம் குறித்தும் அதன் வரலாறு குறித்தும் பேசுபவர்கள் சங்ககாலத்தில் இருந்து தொடங்குவது வழக்கம். அதன் போக்கில் மன்னர்கள், எழுத்தாளர்கள், தமிழ்வளர்த்தல், சமயம் வளர்த்தல் மட்டும் அன்றி மருத்துவம், சோதிடம் போன்ற துறைகளிலும் இவைதவிர சாதிப்பாகுபாடு வர்க்கப்போராட்டம் பெண்ணுரிமை என்பன பற்றியும் கல்வி முறைமை பற்றியும் படைப்புக்கள் படைக்கப்பட்டது. காலப்போக்கில் தமிழனின் தேவை தனி நாடாக இருந்தபோது போராட்ட வீச்சின் உச்சத்தில் இலக்கியங்கள் அவைசார்ந்தே

படைக்கப்படுகின்றது. இதன் வளர்ச்சியில் மக்கள் பங்களிப்பதன் மூலம் தான் வரலாற்றை உண்மையுடன் கொண்டு செல்லமுடியும். தவரின் நாமும் அடையாளம் அற்றுப் போய்விடுவோம்.

## உணவு

ஆரோக்கிய வாழ்வைத்தாண்டி எம் உற்பத்தியின் தன்மை காலநிலை. பிரதேசங்களின் இயல்பு என்பவற்றை வரும் தலைமுறைக்கு எம்மை அறியாமல் கடத்திச்செல்லப்படும் பெரும் ஆரோக்கியமான இயல் உணவு. ஆனால் இன்று நாம் என்ன உணவு

வகைகளை உண்ணும் மோகத்தில் உள்ளோம் என்பது சொல்லி தெரியத் தேவையில்லை. வீட்டிலாவது எங்கள் பண்பாட்டு உணவுகளை செய்து இன அடையாளங்களை ஆரேக்கியமாக்கவேண்டும் என்பதை உறுதி கொள்ளவேண்டும்.

## அரசியல்

சுதந்திரம் எனும் பெயரால் சிறைகளில் அடைக்கப்பட்ட ஓர் பெரும் இனம் நாங்கள். மேற்கூறப்பட்ட இன அடையாளங்கள் எமக்கென்று ஒரு சரியான அரசியல் இருப்பு இன்று இல்லாததன் காரணமாக, செல்லரித்தால்போல் சிதைந்து போகின்றது. தமிழ் ஈழமெனும் வடிவமைக்கப்பட்ட தேசத்தின் கீழ் எவ்வாறு பேணி பராமரித்து அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லப்பட்டது என்பதும் யாவரும் கண்ணூடாக பார்த்து மகிழ்ந்த விடயமே. அத்தேவை இன்று மீண்டும் உணரும்போது நாம் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியில் அமைதியாக இருந்து, அரசியலை நகைத்துக்கொண்டு இருப்போமானால் நாம்தான் நம்மினத்தை மாற்றும் முதல் எதிரிகள். முதலில் யாவரும் வீடுகளில் எம்மை அடையாளப்படுத்துவோம். தொட்டுக்கொண்ட விடயங்களின் விரி-வான தேவை ஒரு வாய்ப்பாடு போல். இந்த நிமிடத்தில் எம் கண்முன் மாறியதை நினைத்தால் எதிர்காலம் கட்டாயம் எல்லோர்முன்னும் விம்பமாகும்.தமிழனுக்கு என்ற ஒரு நாடு இல்லாததன் பாதிப்பு யாவர் உள்ளங்களிலும் கேள்வியாகட்டும்! தீர்வு கிட்டும்!

**- கீர்த்திதீபன் -**

**உயிரே போகும் நிலை வந்தாலும்**
**தைரியத்தை விடாதே நீ சாதிக்கப் பிறந்தவன்**
**துணிந்து நில் எதையும் வெல்**

-சுவாமி விவேகானந்தர்-

# இம்மண்ணின் பூர்வகுடிகளை நாடற்றவர்களாய் மாற்றிய ஆரியர்கள்

**ரோமா மக்கள்,** ஏறத்தாழ 1.2 கோடி மக்கள் தொகை கொண்ட ஒரு இனக்குழு தங்களுக்கென தெளிந்த வரலாறு இல்லாதவர்களாய் தாய் நிலம் அற்றவர்களாய் பெரும்பாலும் நிரந்தர வாழ்வாதாரம் இல்லாமல் செல்லும் இடங்களிலெல்லாம் கீழ்த்தரமான கண்ணோட்டத்தில் பார்க்கப்படும் மக்கள், ஐரோப்பிய நகரங்களின் வீதிகளில் பிச்சை எடுத்தும், திருடியும் வாழ்க்கை நடத்தும் சிறார்கள்.

கடந்த நூற்றாண்டு வரையிலும் இவர்கள் எகிப்திலிருந்து நாடோடிகளாய் குடி பெயர்ந்தவர்கள் என்று நம்பப்பட்டு வந்த நிலையில் நிகழ்த்தப்பட்ட பல மொழிக்கூறு மற்றும் மரபணு ஆய்வுகள் இவர்கள் இந்திய துணைக்கண்டத்திலிருந்து குடி பெயர்ந்தவர்கள் என்பதை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது.

கி.பி 12ம் நூற்றாண்டின் முற்பகுதிகளில் வடமேற்கு மற்றும் மேற்கு இந்தியாவிலிருந்து சிறு கூட்டங்களாய் பாரசீகம் நோக்கி பயணித்த மக்கள் ரோம பேரரசின் கிழக்கு பைசாண்டைன் இராச்சியத்தில் குடியேறினர். அங்கிருந்து 15ம் நூற்றாண்டுக்குள் இத்தாலி, பிரான்சு, எசுப்பானிய இராச்சியம், உருசிய பேரரசு மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் பிற பகுதிகளிலும் குடியேறினார்கள். ஐரோப்பியர்கள் அமெரிக்காவுக்கு குடி பெயர்ந்த போது அவர்களுடன் ரோமா மக்களும் அமெரிக்காவை அடைந்தனர். பிறகு அங்கிருந்து ஆஸ்திரேலியாவிலும் குடியேறினர். இன்று உலகம் முழுவதும் பரந்து வாழ்கிறார்கள் என்றாலும் இவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் பெரும்பாலும் அடிமைப்படுத்தப்பட்டு பல கொடுமைகளுக்கு ஆளானார்கள். 16ம் நூற்றாண்டுகளில் ரோமா மக்களுக்கு எதிராக பல ஐரோப்பிய நாடுகளிலும் சட்டம் இயற்றப்பட்டது. 19ம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்காவிலும் பிற மேற்குலக நாடுகளிலும் அடிமை முறை ஒழிக்கப்படும் வரை எசுப்பானியா, ரோமானியா போன்ற நாடுகளில் அடிமைகளாக தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர். டென்மார்க் அரசு ஒரு படி மேலே போய் தங்கள் நாட்டுக்குள் ரோமா மக்கள் பிடிபட்டால் மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் அறிவித்திருந்தது. பின்னாட்களில் ஓட்டோமன் மற்றும் உருசிய பேரரசுகளில் மட்டும் ரோமா மக்களுக்கு ஓரளவு அங்கீகாரம் கிடைத்தது. இரும்பு கொல்லர்களாக இருந்த இவர்களை போர்கருவிகள் வடித்து கொடுக்கவும் போர் வீரர்களாகவும் சேர்த்துக்கொண்டனர். ஜேர்மனியில் இட்லரின் ஆட்சியில் யூதர்களுக்கு நிகராக ரோமா மக்களும் இன அழிப்புக்கு

ஆளானார்கள். உலகின் பெரும்பாலான சமூகங்களிலும் ரோமானி மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வும், காழ்ப்புணர்ச்சியும் இன்றளவும் இருக்கவே செய்கிறது.

## உண்மையில் இந்த ரோமா மக்கள் யார்?

இந்தியாவின் மேற்கு மற்றும் வட மேற்கு பகுதியிலிருந்து குடி பெயர ஆரம்பித்தவர்கள் என்பதால் இவர்கள் இந்தோ ஆரியர்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றனர். மாறாக ரோமா மக்கள் இந்திய துணைக்கண்டத்தில் தலித் மக்களாக இருந்து குடிபெயர்ந்தவர்கள். அதிக அளவானோர் "டோம்பா" என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள். டோம்பா என்ற பெயரே பின்னாட்களில் ரோமா என மாற்றம் பெற்றது. சமஸ்கிருத மொழியில் "டோம்பா" என்பதற்கு தாழ்குடியை சேர்ந்த இசை கலைஞர்கள் என்றும் பிராக்ரித் மொழியில் பறை இசைக்கும் திராவிட மரபை சார்ந்தவர் என்றும் பொருள்படுகிறது.

கி.பி 980களில் ஆரம்பித்த இசுலாமிய படையெடுப்புகள் மேற்கு மற்றும் வட மேற்கு இந்தியாவில் ஆரியர்களின் ஆதிக்கத்தை வெகுவாக குறைத்தது. அதுவரை காலமும் ஆரிய பிடியில் இருந்த டோம்பா மக்களில் சிலர் புதிய வாழ்க்கையை தேடி மேற்கு நோக்கி பயணிக்க ஆரம்பித்தனர். இசை கலைஞர்களாக இருந்த இவர்களில் சிலர் பாரசீக நாட்டு வாணிகர்களிடம் விற்கப்பட்டனர். நாடோடிகளாக நகர்ந்த இந்த கூட்டத்தவர் செல்லும் இடங்களில் இருந்த பண்பாட்டு தாக்கங்களை உள்வாங்கிக் கொண்டனர். அங்கிருந்த மக்களுடனும் கலந்தனர். அர்மேனியா, எகிப்து போன்ற பகுதிகளில் அங்கிருந்த சில மக்களும் இவர்கள் கூட்டங்களுடன் இணைந்து கொண்டனர். இன்று பல்வேறு நாகரிகங்களின் தாக்கம் கொண்டவர்களாகவும் பல்வேறு மக்களை உடையவர்களாகவும் ரோமா இனக்குழுவின் மக்கள் உள்ளனர். மரபணு ஆய்வுகள் ரோமா மக்களின் 47 வீத ஆண்கள் Haplogroup H - M 82 பிரிவை சார்ந்தவர்கள் என்கிறது. இந்த வகை H Haplogroup chromosome பிரிவை சார்ந்தவர்கள் என்கிறது. இந்த வகை H Haplogroup chromosome பிரிவு இந்திய துணைக்கண்டத்தின் தென் பகுதியை சார்ந்தது. 25000 முதல் 45000 ஆண்டுகளுக்கு முன்பு அவை இந்திய துணைக்கண்டத்தில் தோன்றியிருக்கலாம் என்று மரபணு அறிவியலாளர்கள் நம்புகின்றனர். இன்றும் தமிழகத்தின் சேலம் மாவட்டத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இந்த "தோம்பர்" மக்கள் வாழ்ந்து வருகின்றனர். Haplogroup H - Possible time of origin :25000-45000 years BP - Highest frequencies : Romani people & populations of India

இந்திய துணைக்கண்டத்தில் கி.மு 2000 ஆண்டுகள் வாக்கில் நிகழ்ந்த ஆரிய

ஊடுருவலுக்கு முன்பு வரை தமிழே இந்திய துணைக்கண்டம் முழுவதும் பரந்து இருந்தது. தொடர்ந்த ஆரிய ஊடுருவல் தமிழர் ஆட்சிப்பகுதியை இந்திய தீப கற்பத்தின் தென் பகுதிக்குள் கட்டுப்படுத்தியது. வடக்கே ஆரியர்களை எதிர்க்க முடியாமல் அவர்களிடம் அடிமைப்பட்ட மண்ணின் மைந்தர்களை ஆரிய சனாதன தர்மம் தாழ்ந்தவர்களாய் மாற்றியது. பல பழங்குடி பிரிவுகளும் ஒடுக்கப்பட்ட தலித் சமூகங்களும் தோற்றம் பெற்றது. இன்றைய மராட்டியத்தின் மகர், குஜராத்தின் பஞ்சாரா போன்ற தலித் சமூகங்கள் ஆரிய ஊடுருவலுக்கு முந்தைய வரலாறுகளை கொண்டுள்ளவர்களாய் இருப்பதே சான்று. மேலும் மேற்கு பாகிஸ்தானின் மக்ரான் பீட பூமியில் வாழும் திராவிட பிராக்வி இனத்தவரும், நேபாளில் சில பழங்குடிகளால் இன்றளவும் பேசப்பட்டு வரும் தாங்கர், வங்கதேசத்தின் ஓரான் சமூகத்தினர் பேசும் குருக்சு போன்ற திராவிட மொழிகள் அன்று தமிழர்களின் ஆளுகை இந்திய துணை கண்டம் முழுவதும் இருந்ததற்கு சான்று பகர்கிறது.

சிந்து சமவெளி நாகரிகமும் திராவிட நாகரீகமே என்று பல வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக்கொள்கின்றனர் மாறாக இந்திய அரசு ஆராய்ச்சிகளுக்கும் தகவல்களுக்கும் கட்டுப்பாடுகள் விதித்து ஆரியர்களை இம்மண்ணின் மைந்தர்களாகவும் சமஸ்கிருதத்தை இந்திய துணைக்கண்டத்தின் பழமையான மொழியாகவும் நிறுவ இயன்ற அத்தனை முயற்சிகளையும் செய்கிறது.

தமிழை திரித்து பல திராவிட இனங்களாய் பிரித்து மண்ணின் மைந்தர்களை அடிமைப்படுத்தியது மட்டும் ஆரிய வந்தேறிகளின் சாதனை அல்ல. இந்த மண்ணின் பூர்வகுடிகளில் சிலரை நாடோகளாயும், தாயகம் அற்ற பரதேசிகளாயும் உலகம் முழுவதும் அலையவும் செய்துள்ளார்கள் இவர்கள்.

- Stalin Dass -

**சிக்கல்களை எதிர் கொள்ளும் போது**
**கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.**

-அப்துல் கலாம்-

# டால் டிக்கி டமால்
# சாத்தானின் குழந்தைகள்



யாழ்ப்பாணத்தின் பக்கத்தில் ஒரு மினி நகரம் தான் 'திருநெல்வேலி' செல்லமாக 'தின்னவேலி' என்று அழைப்பார்கள். இங்கே மிடில் கிளாஸ் தான் ஆதிக்கம் அதிகம். பெரும்பாலும் வியாபாரிகள் அரசாங்க உத்தியோகத்தர்கள் வங்கிகளின் மற்றும் தனியார் கம்பனிகளின் கொத்தடிமைகள் என்று நகரமே பரபரப்பாக தானிருக்கும் ஸ்பெஷலாக சொல்வதென்றால் தின்னவேலி மார்க்கெட் ரொம்ப பிரபலம். காலையிலேயே களை கட்டிவிடும் பொடி நடையாக நடந்துபோனால் பின்வருபவனவற்றை நீங்கள் பார்க்கலாம். பீடியை இழுத்து பனியில் அற்புதமாக விடும் வீபூதி பூசிய வயதான முகங்கள் கொஞ்சம் தள்ளி மரக்கறி வந்து நிற்கும் வண்டிகள் மூட்டை தூக்கும் தொழிலாளிகள் அவர்கள் எப்போதும் மூட்டையை தூக்குவதில்லை கைப்பற்றுவார்கள். எப்படி என்றால் ஒரு மோட்டர் சைக்கிளில் மூட்டை வருகிறதென்றால் ரன்னிங்க்லையே போய் கொக்கியை மாட்டி விடுவார்கள் பிறகென்ன சாவகாசமாக போய் இறக்கி வைப்பார்கள். அவ்வளவு போட்டி! இதுல கூட போட்டியா எண்டதும் ரொம்ப பீலிங் ஆகாம இருப்பீர்கள் என்றால் அவர்கள் பற்றிய சில கதைகளை உங்களுக்குச் சொல்கிறேன்.

திருநெல்வேலிக்கு பக்கத்தில் இருக்கும் இடம், பால்ப்பண்ணை, அதை சுற்றியிருக்கும் இடங்களை எங்கள் வீடுகளில் கொலனி என்று குறிப்பிடுவார்கள். அங்கே இருப்பவர்கள் சாதி குறைந்தவர்கள் என்று நாங்கள் சின்னனாக இருக்கும் போதே சொல்லி வைத்திருந்தார்கள் அவர்களில் அழகன்கள் இல்லை அழகிகள் இல்லை கிழவிகள் முதல் குமரிகள் வரை பெரும்பாலும் ஒரே நிறம் தான். கலைந்த தலைமுடி நாறும் உடல், மண் ஒட்டிய தோல் ..இது தான் அவர்கள். தமிழ் நாட்டின் குப்பம் சேரி போன்ற இடங்களை சினிமாவில் பார்த்திருப்பதால் இவர்கள் அப்படி தானோ என்று நினைத்தேன் இருந்தும் இவர்கள் என் வயது பிள்ளைகள் எனக்கு இப்போது 20. 13 வயதில் பாரதியாரை தெரியும் வரை இவர்களை எனக்கு கீழாகவே நினைத்திருந்தேன் யெஸ் அவர்களை ஒரு ஸ்லம் (slum) ஆகவே நான் எண்ணினேன். பின் நான் பள்ளிக்கூடம் போனேன், அவர்கள் போகவில்லை. பள்ளிக்கூடங்களை பார்த்து பயந்தார்கள் அல்லது போக வசதியில்லை. கோயில் திருவிழாக்களில்அபிஷேகம் செய்த இளநீர் கோம்பைகளை நாங்கள் கொடுக்கவில்லை. ஆகவே திருடினார்கள். நான் தங்கச் சங்கிலி போட்டிருந்தபோது அவர்கள் சட்டை பட்டன் இல்லாமல் நின்றார்கள். இவை எனது கடந்தகால நினைவில் இருப்பவை.

இப்பொழுது மீண்டும் அவர்களைப் பார்க்கிறேன் சைக்கிள் கடைகளில் வேலை

செய்கிறார்கள் கையில் கொக்கிகளுடன் வீதியில் மூட்டை தூக்கிகளாக நிற்கிறார்கள். சிலர் என் முகத்தை தெரியாதது போல் திரும்பினார்கள் சிலர் எதற்கென்றே தெரியாமல் முறைத்தார்கள்.

இனி அவர்களுடைய இன்றைய தலைமுறை பற்றிய கதை, டால் என்பவன் தான் இருப்பதிலேயே வயது கூடியவன். அநேகமாக அந்தக் கூட்டத்தின் தலைவன், பெயர் வரக்காரணம் - பெரிய பருப்பு என்பதால். அடுத்தது டிக்கி இவன் தான் இருக்கிறதிலேயே வயது குறைந்தவன் ஜட்டி போடும் பழக்கம் அறவே இல்லையென்பதாலும் பின்புறத்தை எப்போதும் காட்டும் படி காற்சட்டை போடு-வதாலும் அவனை டிக்கி என்று அழைப்போம். டமாலுக்கு துப்பாக்கி சுடும் படங்கள் தான் மிகப் பிடிக்கும். சரி இவர்கள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் யாருக்கும் தெரியாமல் கொத்து ரொட்டி சாப்பிட்டு விட்டு எங்கள் வாசலில் கொட்டியிருக்கும் மணல் கும்பியில் ரெஸ்லிங் விளையாடுகிறார்கள் ! அடி என்றால் அடி மரண அடி அந்த அடி எனக்கு விழுந்திருந்தால் அழுது கொண்டு அம்மாவிடம் போய் நின்றிருப்பேன் ஆனால் அவனோ சிரித்துக் கொண்டு எழுந்து நின்றவன் தமிழ் சினிமாவின் அநேக கதாநாயகர்களில் ஒருவனாக தன்னை கற்பனை செய்து கொண்டு டிக்கியை தூக்கி டமால் என்று தரையில் போட்டான். கழுத்தெலும்பு "டிக்" என்றது பயந்து போன நான் பிடித்து நிறுத்தினேன் "அண்ணை பயந்துட்டார்" எண்டான் டால். அழுதுகொண்டு ஓடிய டிக்கியை பிடித்து சமாதானம் பண்ணினார்கள். அவனும் தினசரி பழக்கப்பட்டவன் தானே சமாதானமாகிவிட்டான் நானும் அவன் பாவம் என்று நினைத்தேன் இரவில் அவன் செய்த ரவுடித்தனத்தை பார்க்கும் வரை அடக் கடவுளே நானே நாலு போட்டிருப்பன். அவனது அப்பாவின் சாரத்தை பிடித்து இழுத்தான் (அவருக்கு இப்பொழுது தான் தாடி அரும்பியிருக்கிறது, ரொம்ப சின்ன வயசு, திருமணம் ! அப்பா ! குடும்பம் !) "அடிடா பாப்பம்" என்று அப்பாவை திட்டிக் கொண்டிருந்தான் பக்கத்து வீட்டுக்காரர்கள், "டேய் அப்பாண்ட சாரத்த களட்றா களட்றா" என்று உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த கண்கொள்ளா காட்சியை பார்த்து அடுத்த சில நாட்களில் டிக்கியின் அப்பா யாரையோ அடித்து விட இறங்கிய பெண்கள் கூட்டம் பேசிய பேச்சென்ன! ஆடிய ஆட்டமென்ன! ஒரு கிழவி எல்லாவற்றையும் முறையாக தொடங்குவது போல் வேழுழுழுழுழு(இது ஒரு தடை செய்ப்பட்ட கெட்ட வார்த்தை) அந்த கடவுளுக்குத் தான் எல்லாம் தெரியும் என்று கடவுளைத் திட்டி தனது உரையை ஆரம்பித்து முடித்தாள். டிக்கி வயதும் டமால் வயதும் இருக்கும் நிறைய குழந்தைகள் தெரு முழுதும் அலறினார்கள் கத்தினார்கள் ஆரவாரித்தார்கள். தடிகள் பியர் போத்தல்கள் ஆயுதமாயின. பின் கலைந்து சென்றனர். எப்போதும் நடப்பது போல் . டால் நேற்று போகும் போது என்னைப் பார்த்து புன்னகைத்தான் டிக்கி ஒரு

கொடுப்புச் சிரிப்பொன்று சிரித்தான், குழந்தைகளா? கொலைகாரர்களா? இவர்கள். இவர்களின் இசை பற்றிய கொண்டாட்டத்தை இன்னொரு பந்தியில் கூறுகிறேன் அற்புதமாக இருக்கும்.

கடவுளும் சாத்தானும் வாழும் பகுதியில் ஒரு அப்பாவியாக இருக்கும் என்னை அவர்கள் ஏன் முறைக்கிறார்கள். ஏன் ஒதுங்குகிறார்கள். என் முன்னோர் சொன்ன சொற்கள் என்னிலும் ஒட்டியிருக்கும், அவர்களுக்குத் தெரிகிறதோ என்னமோ? அவர்கள் வீட்டில் என்னைப் பற்றி என்ன சொல்லியிருப்பார்கள் நான் சாத்தானா? கடவுளா ?

**கிரிஷாந்**

# எமது சமயவழிபாட்டு முறைகள் அனைத்தும் தாய்மொழியில் அமைந்திட வேண்டும்

வழிபாடு இயற்றும் மொழியின் பொருளறிந்து உணர்வு கலந்து வழிபாடு செய்வதேபயனுடையதாகும். தமிழராகிய நாம் எமது தாய்மொழியாகிய தமிழில் வழிபாடுசெய்வதே உணர்வோடு கூடியதாகவும் உயிர்ப்புடையதாகவும் அமைந்திடும்.

"சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்சிவபுரத்தின் உள்ளார்சிவனடிக்கீழ்" என்றுரைக்கிறது சிவபுராணம். இதன் தார்ப்பரியம் எதுவென்றால் ஆராதனையோ அல்லது அர்ச்சனையோ எதுவாயினும் தமிழிற் செய்வதே பொருத்தமுடையது என்பதாகும்.

"மெய்தான்அரும்பிவிதிர் விதிர்த்துவிரையார் கழற்குகைதான தலை வைத்துக் கண்ணீர் ததும்பிவெதும்பி உள்ளம் பொய் தான் தவிர்ந்து போற்றி செய்ய வேண்டும் "என்றுகூறுகின்றது திருவாசகம். உள்ளத்தால் பொய்யாது உணர்வு கலந்து மெய்யுருகி வழிபாடுசெய்வதே பொருத்தமுடையது என்பதே திருவாசகத்தினது பொருளாக இருக்கின்றது .

"அன்புள் உருகி அழுவன் அரற்றுவன் என்பும் உருவ இராப்பகல் ஏத்துவன் என்பொன்மணியை இறைவனை ஈசனைத்தின் பன்கடிப்பன் திருத்துவன்தானே" என்று கூறுகின்றது திருமந்திரம்.

மேற்காட்டிய திருவாசகமும் திருமந்திரமும் கூறும் அன்பின் நிலையை எட்டுவதற்கு

ஆராதனை செய்யும் மொழியின் பொருள் தெரிந்திட வேண்டும். இதற்கமைவாகவே தேவாரம் திருவாசகம் உட்பட பன்னிரு திருமுறைகளும் தமிழ்மொழியில் பாடப்பட்டுள்ளன. பிற்காலத்திலும் பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழியில் உருவாகியுள்ளன .

சுந்தரரால் முதன் முதலாகப் பாடப்பட்ட தேவாரப்பதிகத்திற்கு இறைவனே அடியெடுத்துக் கொடுத்துள்ளார் என்றும் மாணிக்கவாசகரால் பாடப்பட்ட திருவாசகத்தை இறைவனே எழுதியருளினார் என்றும் எமது சமய வரலாறு சொல்கிறது .

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு" என்று சொல்கிறார் திருமூலநாயனார் . " தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்று சொல்கிறது நாவுக்கரசரின் தேவாரப்பதிகம்.

நாயன்மார்கள் இறைவனைப்பாடிய தமிழில் இறைவனால் பேசப்பட்டதும் எழுதப்பட்டதுமாகிய தமிழ் மொழியில் உலகில் பூத்த முதல் மொழியான எங்கள் இனியதமிழ் மொழியில் அர்ச்சனை ஆராதனை வழிபாடுகளை செய்வதற்கு இன்னும் ஏன் எமக்குத்தயக்கம் ? நாவுக்கரசர் ஞானசம்பந்தர் சொல்லிய வழியில் அவர்கள் காட்டியபாதையில் எங்கள் சைவசமயம் செல்லவேண்டும். சமயகுரவர் நால்வர் காலத்தில் சைவம் வேறு தமிழ் வேறாகப்பார்க்கப்படவில்லை. சைவத்தை வளர்க்க தமிழ்மொழி பயனுடையதாய் இருந்தது. தமிழால் வளர்க்கப்பட்ட சைவம் தமிழை வளர்த்தது. நால்வர் காலத்திற்குபின் தமிழைப் பின்தள்ளி தமிழ் மொழி இருந்த இடத்தை ஆரிய (சமஸ்கிருதம்) மொழி ஆக்கிரமித்துக்கொண்டது. பொருள் புர-ியாத மொழியைப்பயன்படுத்தி ஆரியர்தமிழரை அடிமைப்படுத்தியுள்ளனர். மந்திரம் எனும் மாயைக்குள் மயங்கிய தமிழர் தம் மொழியைமறந்தனர். ஆலயங்களில் அர்ச்சனை ஆராதனை எனும் வழிபாட்டுமுறைக்குள் "தேவாரவழிபாடு" எனும் சிறிய இடத்திற்குள் தமிழ் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆரியர் மொழியின் உள்நுழைவு நாயன்மார் காலத்திலோ அல்லது அதற்குமுன்போ சிறிதளவு இருந்திருக்கிறது. இதனை நாயன்மார்கள் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மந்திபோல் திரிந்து ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா அந்தகர்க்கு எழியேனலேன்" என்று தமிழின சுவை அறியாது அதன் பெருமைபுரியாது ஆரியத்திற்கு துதிபாடுவோரைக் கடிந்துள்ளார் உலக மகாசக்தியின் ஞானப்பாலுண்ட நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர்.

## கத்தோலிக்கதமிழர்

கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்த தமிழர்கள் குருவானவரோடு இணைந்தும் தனித்தும் தங்கள் இறை ஆராதனையை தாய்மொழியாகிய தமிழிலேயே செய்கிறார்கள். இதனை இறைவனும் ஏற்றுக் கொள்ள மறுக்கவில்லை. தாய்மொழியில் பொருள் புரிந்துவழிபாட்டைச் செய்வதால் தேவாலயங்களில் அமைதி நிலவுகின்றது. வீண் ஆடம்பர செலவுகளில்லை, சடங்குகள் என்றும் ஏதும் இல்லை. புரிந்துணர்வு உண்டாகி அருள்கூடுகின்றது. கத்தோலிக்கர்களின் வழிபாட்டு முறையைப் பார்த்தாவது சைவசமயத்தவர்களும் தமது வழிபாட்டு முறைகளை தாய் மொழியில் மேற்கொள்ளவேண்டும்.

"எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிந்தவர் எல்லாம் வல்லவர் இறைவன்" என்றுரைக்கின்றன சமய நூல்கள். எங்கும் நிறைந்த இறைவன் எமது கண் முன்னே தோன்றும் கற்கோவில் களிலும் வீற்றிருப்பார் என்ற உண்மையை மறந்து எங்குமுள்ள இறைவனை தேடி கடல் கடந்தும்( தமிழ்நாடு ) அதற்கப்பாலும் எல்லை கடந்து செல்கின்றோம். பணம் படைத்தோருக்கும் பதவியில் உள்ளோருக்கும் முன்னுரிமை அளித்திடும் கோயில்களுக்கு பொருளை நாமும் அள்ளிக் கொடுத்து விட்டு வருவது அறிவுடமை யாகாது . நாம் கொடுக்கும் காணிக்கை பயனுடையதாக அமைய வேண்டும்.

விளக்கேற்ற வழியற்ற நிலையில் நம் கண் முன்னே தோன்றும் கோயில்களைத் தவிர்த்து விட்டு பொன்னையும் பொருளையும் அறைகளில் குவித்து வைத்து நாட்டின் பொருள் வளத்தை முடக்கி வைத்திருக்கும் கோயில்களுக்கு கொண்டுபோய் கொடுக்கும் காணிக்கைகள் தவறானவர்களிடம் போய்ச்சேருகின்றது. அல்லது கோயில் அறைகளில் யாருக்கும் பிரயோசனமற்று காலம் காலமாக முடங்கிக் கிடக்கின்றது. ஏழை எளியவர்களுக்கும் உடல் உறுப்புகளை இழந்து தங்கள் வாழ்விற்கு எங்கிருந்தாவது உதவி கிடைக்காதா? என்று ஏங்கித் தவிக்கும் பரிதாபத்திற்குரியவர்களுக்கும் இறைவன் பெயரால் உதவியளித்திடுவது உயரிய செயல் ஆகும். இறையன்பைப் பொருள் கொடுத்துப் பெறமுடியாது. எமது சமய குரவர்கள் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டகாலத்தில் இறைவனிடம் பாடல் பாடிபடிக் காசு பெற்று பசித்தோர் துயர் தீர்த்தனர். என்று எமது சமயவரலாறு கூறுகின்றது. "வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்டமுழுதும் தருவாய் நீ என்று" திருவாசகம் கூறுகின்றது. "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்றுரைக்கிறது நாவுக்கரசரின் திருத்தாண்டகம். எனவே வேண்டத்தக்கதை அறிந்து வேண்டியதை இறைவன் தந்தருள்வான். இறைவனுக்குநாம் கொடுக்கவேண்டியது பொருள் அல்ல

அன்பு. இறைவர்க்கோர்பச்சிலை (வில்வம்) போதுமென்கிறார் திருமூலநாயனார். இறைவனது அன்பை அழுது தொழுது பெறவேண்டும் என்கிறார் மாணிக்கவாசகர். " பொன்னடியே பரவினாளும் பூ வோடு நீர் சுமக்கும் நின்னடியார் இடர்களையாய்" என்றுரைக்கிறது சம்பந்தரின் தேவாரப்பதிக வரியொன்று. இறைவனை ஆராதிப்பதற்கு நீரும்பூவும் போதுமானது என்பது இப்பாடல் வரிகளின் கருத்தாகின்றது ஆதலால் பொன்னும் பொருளும் உண்டானால் இறைவனது பெயரால் வறியோர்க்கு உதவுவதே உயந்த செயலாகும். இறை வழிபாட்டின் உன்னத நோக்கமும் இதுவே ஆகும் எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டுவதே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரனே ! இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்தினிடையே வீடுவாசல்களை மற்றும் உடைமைகளை இழந்தவர்களும் உடல் உறுப்புக்களை இழந்தவர்களும் கட்டியகணவனை இழந்து பெற்ற பிள்ளைகளை பராமரிக்கமுடியாமல் தவித்து நிற்கும் கைம்பெண்களும் பெற்றோரை இழந்து நிற்கும் பிள்ளைகளும் எங்கிருந்து என்றாலும் எவரிடமிருந்து என்றாலும் தங்கள் வாழ்வை மேற்கொள்ள உதவிகள் கிடைக்காதா ? என்று ஏக்கப் பெருமூச்செறிந்த நிலையில் உள்ளார்கள். எமது இனத்தினரிடையே உள்ள சமூகப்பற்று மிகுந்த சில கனவான்களின் உதவியே இவர்களிற் சிலருக்கு கிட்டியுள்ளது இவை போதுமானவை அல்ல பிறரின்உதவியை எதிர்பார்த்திருக்கும் இப்பரிதாபத்திற்கு உரியவர்களை எண்ணிப்பார்ப்போர் அரிதாக வே காணப்படுகின்றனர். அப்பரிதாபத்திற்கு உரியவர்களுக்கு உதவிக்கரம் கொடுக்க அவர்களின் இடர்பாடுகளை களைந்திட அவர்களுக்கு தொண்டு செய்ய எமது ஆலயங்களின் அறங்காவல்சபையினர் முன்வரவேண்டும். வாழ்வின்தாழ்வு நிலையில் உள்ளோர்களின் உயர்வுக்கும் அவர்களின் பிற்சந்ததியினரின் கல்விமேம்பாட்டிற்கும் எமது ஆலயங்கள் முன்னுரிமை அளித்திட வேண்டும். இப்பணியை ஆலயங்களிற் கூடாகவும் அன்னதான சபைகளுக் கூடாகவும் செய்வது இலகுவானதாகும் இப்பணியைச் செய்திடுவோர் நன் மக்களால் போற்றப்படுவார்கள். இறையருளும் கிடைத்திடும். ஆதலால் அன்பேசிவம் என உணர்ந்து அறநெறியால் ஆராதிப்போம். இதுவே எமது வாழ்வின் குறிக்கோளாய் இருந்திட வேண்டும்.

**வே.சு.கருணாகரன்**
ஆலோசகர் - சூழலியல் மேம்பாட்டு அமைவனம் ( சூழகம் )
யாழ்ப்பாணம்



# சொல்லிடுவன்...

கொஞ்சம் மங்கலான பொழுது சூரியன் அப்பொழுதுதான் குளக்கரையின் முடிவில் மீனுடன் பேசிக்கொண்டு இருந்தான். தலையில் கொஞ்ச விறகு கட்டைகளை சுமந்தபடி மணியக்கா வேகமா குளக்கட்டின் விளிம்பில் நடந்தபடி இருந்தார் .... மேச்சலுக்கு போன லட்சுமி வீடு வரமுன் போகவேணும் என்னும் வேகம் மட்டும் மணியக்கா கண்களில் குடிகொண்டுள்ளது தான் போக கொஞ்சம் சுணங்கினாலும் களனி தண்ணியை தட்டி ஊற்றி முற்றம் எல்லாம் சேறா ஆக்கி போடுவாள் என்று சேலை தலைப்பை இழுத்து செருகிக்கொண்டு நடந்தாள் மணி ... அந்த அந்திசாயும் பொழுதுதான் கண்ணனுக்கு பிடிச்ச பொழுது குளக்கரை ஆலமரம் எப்பொழுதும் தனியா வந்து இருந்து ரசிப்பது அவனுக்கு ரொம்ப பிடிக்கும். தனிமையில் இருக்கும் பொழுதுகளில் அவனின் சிந்தனை எல்லாம் எதிர்காலம் எப்படி அமையும் என்பதே ..ஆனால் அவன் அருமையா கவிதை எழுதுவான். அவன் தனது பாட கொப்பிகளில் கடைசி பக்கம் கிறிக்கி இருக்கும் கவிதைக்கு அவனுடன் படிக்கும் பெண் தோழிகள் அடிமை எனலாம் ... மணியக்காவின் வேகமான நடை கொஞ்சம் மெதுவா ஆகி தனது கண்களை குளக்கரை ஆலமரம் நோக்கி விட்டார் யாரு அது இந்த செக்கள் பொழுதில் இதில் இருப்பது என்று யோசிச்சபடி கண்ணனின் சைக்கிளை விறகு சுள்ளிகளின் முடிவுகள் தட்டியபடி ஒரு ஒலியை எழுப்ப கண்ணன் பாய்ந்து சென்று சைக்கிளை ஒரு கையால் பிடித்து சரி பறவாயில்லை போங்கோ அக்கா என்கிறான் .. மணியக்கா சிறு மூளை பொறி தட்டுது இவன் இந்தநேரம் இங்கின இருக்கிறான் அவருக்கு தெரியாது அவன் தினம் இந்த நேரம் இங்கு இருப்பவன் என்று கண்ணன் யோசிச்சான் சரி முடிஞ்சுது சும்மாவா சொல்லிடுவா இப்ப நேர்ல வேற கண்டிடா சொல்லமால் விடுவாவா ....இல்லை அவா அப்படியான ஆள் இல்லை என்றவாறு தன் மனத்தை தேற்றிக்கொண்டு குளத்தின் வடக்கு அலைகரை நோக்கி தன் பார்வையை திருப்பினான் ... மணியக்கா போவது திரும்பி ஒருக்கா பார்ப்பது என்று ஆழ்த சிந்தனையில் இடதுகரையால் இறங்கிகொண்டு இருந்தார் ...இந்தநேரம் பார்த்து மங்கையும் ஊரில இல்லை இவன் கண்ணன் எப்ப ஊருக்கு வந்தது என்றுகூட மணிக்கு தெரியாது எல்லாமே குழப்பம் மணிக்கு ஏனெனில் கண்ணனின் அம்மா மேட்டுக்குடி கொஞ்சம் ஜாதி திமிர் அதிகம் கண்ணன் இங்கின நின்றால் எவளையாவது விரும்பி தொலைப்பான் என்று அவர் அவனை பட்டணம் அனுப்பி இருந்தார் ..... கண்ணன் எதிர் பார்த்தது போல அவள் தான் வந்துகொண்டு இருத்தாள் கட்டில் இருந்து எழும்பிய கண்ணன் தேவி நில்லு கொஞ்சம் பேசணும் என்று வழிமறிக்க அவளே தன் இரட்டை பின்னலில் ஒன்றை எடுத்து முன்னாடி விட்டபடி போனாள் ...தேவி சொல்லிடுவன் என்று அன்று நீ சொல்லிட்டு போனது பொய்யா ஏன் இப்படி

என்னை கஷ்டபடுத்திர சொல்லு அல்லது சொல்லிடு உன் முடிவை என்று சினிமா கதாநாயகன் கணக்கா வசனம் பேசி முன்னாடி போனான் கண்ணன் .... விறகை தலையில் இருந்து சரித்து தரைக்கு போட்டாள் மணி அப்படியே சேலை தலைப்பை எடுத்து முகத்தை துடைத்தபடி அங்கும் இங்கும் சுற்றி ஒரு பார்வை வைத்தால் லட்சுமியை காணம் எங்க போட்டாள் இன்னும் வீடு வராமல் காலையில் பால் வேற கொடுக்க வேணும் வாத்தியார் வீட்டுக்கு என்று முணுமுணுப்பு செய்தபடி வேலி ஓரம் கண்களை விட்டாள் மணி .. இன்னும் நீ முடிவு சொல்வதா இல்லை தேவி நான் திரும்பி போகவேணும் அதுக்குள்ளே சொல்லிடு என்று அவளின் துப்பட்டாவில் கை-களை மெதுவா உணர விட்டான் அவள் பட்டென துப்பட்டாவை இழுத்து தோள்களில் போட்டபடி உங்களுக்கும் எங்களுக்கும் ஆகாது தெரியும் எல்லே பிறகு எதுக்கு திரும்ப திரும்ப வந்து நின்று கேட்கிறியள் சொல்லுங்க என்று கூறி முடிக்க ... மணியக்கா குளக்கட்டில் ஏறவும் நேரம் சரியா இருந்தது அட பாவி பயல் அப்பன் கண்டால் கொண்டு போடுவான் எல்லே எதுக்கு இந்த தினவெடுத்த வேலை என்று எண்ணிக்கொண்டு அவர்களை கடக்க கண்ணன் சொன்னான் மணியக்கா இந்த பிள்ளையை ஒரு முடிவு கேட்டு சொல்லுங்க நான் கண்ணாலம் கட்டி பட்டணம் போறதா இருக்கு இவா வந்தா நான் நாளைக்கு கூட்டி கொண்டு பட்டணம் போயிடுவன் என்ன ஏது என்று கேட்டு சொல்லுங்க அக்கா .... எண்டா அப்பு இந்த உயிர் என் உடம்பில இருக்கிறது உனக்கு பிடிப்பு இல்லையா நான் லட்சிமியை தேடிவந்தா இங்க மூதேவி குறுக்க நிக்கு என்று பட்டும் படாமல் சொல்லிட்டு அவர்களை கடந்தார் மணியக்கா ... பார்த்திங்கள் தானே சொல்லிடு என்று கேட்டிங்கள் இதுக்கு என்ன சொல்லப்போறியல் என்று விடுகதை போட்டால் தேவி ..எனக்கு தெரியும் அவா இப்ப வீட்டுக்கு போய் சொல்லத்தான் போறா அதுதான் நானே முன்னம் சொல்லிட்டன் என்று கண்ணன் அவளின் கண்களை உற்று பார்த்தான் அவளின் கண்ணில் மெதுவா காதல் எட்டி பார்த்தது இருவர் கண்ணிலும் சூரியன் கீழ் இமைகளில் இறங்கிக்கொண்டு இருந்தார் .. எப்படியும் அவள் காதலை சொல்லிடுவாள் .

**- அஞ்சரன் -**

**தேர்ந்தெடுக்கப்பட்டவன் அயோக்கியன் என்றால்**
**தேர்ந்தெடுத்தவன் முட்டாள்**

-பெரியார்-

# Kumari Kandam

Les Tamouls (தமிழர்) sont un groupe ethnique originaire de l'État du Tamil Nadu, de l'Inde et du nord-est du Sri Lanka. Leur langue st le tamoul, une des langues classiques du monde, dont l'histoire emonte àdeux millénaires. Cependant, les tamouls n'ont pas un endroit propre à eux. Depuis plusieurs générations, nous ne connaissons aucune autre langue et groupe ethnique dans le monde entier que le tamoul, qui a tant souffert des dommages par les organismes naturels et humains, et qui a fait tant d'injustice par des étrangers malignes et dupes indigènes. En effet, les tamouls décidèrent de protester leurs droits et y ont laissé leur vie. Plus de 140 000 personnes sont décédés suite aux bombardements du gouvernement. Même à présent, cette nation continue de subir un génocide effroyable.

Ensuite, une migration importante au cours de la guerre civile a eu ieu, beaucoup ont quitté le pays pour des destinations comme le anada, l'Inde ou l'Europe en tant que réfugiés, ce n'est pas pour autant que l'histoire et la culture des tamouls se sont effacées. En effet, nous sommes tous conscients que l'origine du peuple tamoul et leur culture sont enveloppées de mystère profond. Il existe de nombreuses traditions racontées dans la littérature tôt, comme, les Sangams, le Muthar taymoli de Devanaya Panavar ou bien le Silappatikkaram qui est considéré comme l'un des grands succès de génie tamoul, c'est une interprétation poétique avec des détails de la culture tamoule, ses diverses religions, son plan de la ville et les types de la ville, le mélange de grec, arabe, et les peuples tamouls, et les arts de la danse et de la musique. Cette épopée se réfère à un vaste territoire nommé Kumari Kandam (குமரிக்கண்டம்), aussi appelé Lemuria Kandam. En effet, beaucoup des oeuvres littéraires de Mr P.D. SINIVASAYAR, Mr SESAYAR, Mr RAMACHANTHIRA THICHIDAR et leurs commentaires, mentionne l'histoire du kumari kandam. Suite aux milliers d'années, petit àpetit le tamoul et les tamouls ont fait d'énormes suc-

cès, ils ont fait découvrir l'ancien tamil nadu au monde entier.Kumari Kandam, ou Lemuria Kandam est devenue le «berceau de la civilisation», l'origine des langues humaines en général et la langue tamoule en particulier. Ces idées ont gagné notabilité dans la littérature académique Tamil au cours des premières décennies du 20ème siècle, et ont été popularisé par le Tanittamil Iyakkam.Par ailleurs, les nationalistes tamoulssont venus à identifier Kumari Kandam avec la Lémurie, une hypothétique «continent perdu» pour tenir compte des discontinuités dans la biogéographie. D'après de nombreux savants, tels que Mr HOLDGAM, Mr HEKKAL, Mr KILARRAL, Mr KADUHELIAR, ou Mr Devaneya Pavanar, l'ancien tamoul s'est dispersé en Australie, en Inde, et en Afrique du sud.

1. Lointain ouest - la Grèce
2. A l'ouest - l'Egypte et l'Afrique
3. Au nord-ouest – l'Afrique du nord
4. Lointain est – la Chine
5. A l'est – la Malaisie et le Singapour
6. Au sud – Chaîne de montage d'Australie juqu'en Afrique de sud

Dans Silapathikaram, le commentateur médiéval donne des détails intrigants sur les terres dévorées par la mer. Il mentionne Ezh Tenku Nadu, Ezh Munpalai Nadu, Ezh Pinpalai nadu ,Ezh Kunakarai Nadu, Ezh madura nadu,Ezh kunra nadu, Ezh kurumpanai nadu, une liste de sept de ces régions. Comme « Ezh » signifie «sept», certains interprètes, dira plus tard que 49 régions (7 x 7) ont été dévoré par la mer.

Ce que nous savons de l'antiquité de la civilisation tamoule semble être en haut de l'iceberg. Détails scientifiques relatives à ces événements catastrophiques, en particulier la corrélation des connaissances socioanthropologique disponible à partir de la littérature tamoule à la recherche géologique est encore d'être découvertes ou vérifiées. . Il y a amplement de place pour les savants tamouls, socio-anthropologues et des géologues pour faire des recherches sur ces sujets.

Par ailleurs, je terminerai par demander à tous les tamouls de s'unir dans cette noble recherche pour établir la gloire de langue tamoule et la race tamoule dans le monde entier.

# தாயக பூமி

தமிழர்கள் ஆகிய நாம் எமது இருப்பிடத்தையும் எமது மொழி இனம் கலாச்சாரம் மற்றும் உரிமைகளை பாதுகாக்கும் வரலாற்று பயணத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். தமிழர்களின் தாயக பூர்வீக நிலங்களை கிந்தியத்திடமும் சிங்களத்திடமும் பறிகொடுத்து விட்டு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். 1947 மற்றும் 1948 இல் எம் மீது அடிமைச்சங்கிலி பூட்டப்பட்டது. தமிழர்களாக இருந்த நாம் இந்தியர்களாகவும், இலங்கையர்களாகவும் பிரிக்கப்பட்டோம். இயற்கையின் சீற்றத்தால் பிரிந்திருந்த நாம் 1947 இன் பின் ஆதிக்க அடக்கு முறையாளர்களால் நிரந்தரமாக இந்தியத் தமிழன் இலங்கைத்தமிழன் என்று பிரிக்கப்பட்டு விட்டோம். மேற்கத்தேயர்களின் ஆக்கிரமிப்புக்கு முன் தனிநாடுகளாக விடுதலையுடன் தமிழ் மன்னர்களின் ஆட்சியில் வாழ்ந்த நாம் வஞ்சகம் இரணகம் காரணமாக மேற்கத்தேயர்களுக்கு அடிமையாக வாழ்ந்தோம். இக்காலங்களில் மேற்கத்தேயர்களின் அடக்கு முறைக்கு எதிராக எமது தாயகங்களை மீட்பதற்காக பல வீரப் போர்களை புரிந்தனர். எம் முன்னோர்களானாலும் இரண்டகங்கள் மூலம் தோல்வியையே தழுவியது. பின்னர் பிரித்தானியர்கள் விடுதலை என்ற பெயரில் தாம் போட்டு வைத்திருந்த அடிமைச்சங்கிலியின் சாவியை கிந்திய சிங்கள வஞ்சகர்களிடமும் இரண்டகர்களிடமும் கொடுத்து விட்டு வெளியேறி விட்டனர்.

அதே போன்று பிரித்தானியர்கள் தங்கள் அடக்கு முறையின் கீழ் தமிழர்கள் நாடு-களை வைத்திருந்த காலங்களில் வறுமையின் பிடியில் இருந்த தமிழர்களை தமது ஆதிக்க காலணித்துவத்தின் கீழ் இருந்த தென்னாபிரிக்கா மோரிசியசு, பருமா, மலேசியா, சிங்கப்பூர், பியி, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் மற்றும் இலங்கையின் மலையகம் என்று தாம் வைத்திருந்த இறப்பர் கோப்பி தேயிலை முதலிய பெருந்தோட்ட பயிர்ச் செய்கைகளுக்காக தொழிலாளர்களாக கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களை தங்கள் அடிமைகள் போன்றே வைத்திருந்த பிரித்தானியர்கள் அவர்களுக்கு அந்த நாடுகளில் எந்த உரிமைகளும் குடி உரிமைகளும் கொடுக்காமல் அவர்களை அவ்வாறே விட்டு விட்டு தங்கள் ஆக்கிரமிப்பில் இருந்த நாடுகளுக்கு விடுதலையை வழங்கி விட்டு தமிழர்கள் மீது அவர்கள் இட்ட அடிமைச்சங்கிலியின் சாவியை அந்த நாட்டவரிடம் அவர்களின் விடுதலையுடன் சேர்த்து கொடுத்து விட்டு சென்று விட்டனர். இருநூறு ஆண்டுகளுக்கு மேல் மூன்று தலை முறைகளாக வாழ்ந்த மக்கள் குடி உரிமை மறுக்கப்பட்டு அகதிகள-ாக விரட்டப்பட்டனர். இலங்கையின் மலையகத்தில் வாழ்ந்தவர்கள் தமிழகத்தில் இருந்து வந்தவர்களாயினும் ஈழம் என்பது தமிழர்களின் தாயக பூமியே அதன-

ால் அவர்களுக்கு வாழும் முழு அதிகாரமும் உரிமையும் இருந்தாலும் ஈழத்தின் பூர்வீகக்குடிகளாகிய ஈழத்தமிழருக்கே உரிமைகள் இல்லை என்று அடிமைப்படுத்தி மிகப்பெரிய இனவழிப்பை ஆரம்பித்த வந்தேறிச் சிங்களவர்களால் மலையகத்தில் வாழும் தமிழர்களை, ஈழத்தில் வாழ அனுமதித்தால் தாம் அடக்கு முறை செய்து தாம் ஈமத்தின் பூர்விகர் என்று செய்ய இயலாமல் போய்விடும், என்பதால் அவர்களை குடியுரிமை மறுத்து நாடற்றவர்களாக மாற்றியது ஆரியச் சிங்களம். அதேபோன்று பர்மா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் இருந்தும் விரட்டப்பட்டனர் அவர்கள் தம் பூர்வீக தாயக நிலத்திற்கு அகதிகளாக வந்து சேர்ந்தனர். சிங்கப்பூர்,மொளரிசியசு போன்ற நாடுகள் தமது குடிகளாக ஏற்றனர். தமது நாட்டின் வளர்ச்சியில் தமிழர் பெரும் பங்கு வகித்தவர்கள் என்று கண்ணியப்படுத்தி மரியாதை செலுத்தி சம உரிமை வழங்கினர். ஆனாலும் மற்றைய பல நாடுகளில் அவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு இன்று பல அசௌகரியங்களுடன் வாழுகின்றனர்.

ஆனால் இவர்களை விட அதிகமான அடக்கு முறையின் கீழும் இனவழிப்பின்கீழும் தமிழர், பூர்வீக தாயக பூமியில் வாழ்கின்றனர். தமிழகம் தாயகம் ஆரியக் கிந்திய வெறியர்களின் அடக்கு முறையின் கீழும் தமிழீழத்தாயகம் ஆரியச் சிங்ள அடக்கு முறையின் கீழும் தமிழர்கள் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது 1947ன் பின் விடுதலை என்ற பெயரில் கிந்திய சிறைக்கூடத்தின் சாவியை ஆரியக்கிந்திய வெற்றியர்களிடம் வழங்கி விட்டு சென்றனர். தமிழகத்தாயகத்தில் கிந்திய வெறியர்கள் மொழித்திணிப்பு கலாச்சாரத் திணிப்புக்கள் என்று இனவழிப்பை மேற்கொண்டனர். ஆனால் பல அறவளிப் போராட்டங்கள் மூலம் நிறுத்தப்பட்டது என்ற பெயரில் கிந்திய வெறியர்கள் மறை முகமாக மேற்கொள்கின்றனர். கிந்திய வெறியர்களின் அடக்கு முறைக்கு எதிராக ஆயுதவழிப் போராட்டத்துக்கு வித்திட்டவர்களும் உள்ளனர். தமிழரசன் போன்றவர்களும் உள்ளனர். மற்றும் வீரப்பன் போன்றவர்கள் கிந்திய வெறியர்களுக்கு எதிராக பல தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர். இவர்கள் கிந்திய வெறியர்களின் சூழ்ச்சிகள் மூலம் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். பலர் கூலிப்படைகள் மூலம் படுகொலை செய்யப்பட்டனர்.

பிரித்தானியர்களிடமிருந்து ஆரியச்சிங்களம் வஞ்சகமாக சூழ்ச்சி செய்து தமிழர்கள் தனியாக பிரிந்து செல்லாமல் தங்களுடன் இணைந்து தமிழர்களின் அடிமைச் சங்கிலிச்சாவியை தாம் பெற்று தமது கோரத் தாண்டவங்களை ஆட ஆரம்பித்தனர் 1956இல் சிங்களம் மட்டும் சட்டமென்று தமது இனவழிப்பை ஆரம்பித்து சிறு விடயங்களுக்காக தமிழர்களை தாக்க ஆரம்பித்து 1958இல் மிகப்பெரிய தமிழ்

இனப்படு கொலையை ஆரம்பித்தது சிங்களம். சிங்களத்தை எதிர்த்து ஆரம்பத்தில் அறவழிப் போராட்டங்கள் தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமையில் நடந்தாலும் சிங்களத்தின் இனவழிப்பு அதிகமாகியது. 1972 இல் பிரித்தானியாவிடமிருந்து குடியரசாக மாறியது. ஆனால் அந்த நேரங்களில் அவற்றை எதிர்த்து கறுப்புக்கொடிப் போராட்டங்களை தமிழ் தலைவர்கள் நடத்தினார்கள் 1972இல் தரபடுத்தலின் பின் இளைஞர்கள் கருவி ஏந்திய போராட்டத்தை ஆரம்பித்தனர். தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தலைமையில் விடுதலைப்புலிகள் என்ற மிகப்பெரிய விடுதலைப்படை உருவாகியது.

தமிழீழம் என்ற நிழல் அரசை நடத்தி தமிழ் மக்களை தங்கள் உயிரைக் கொடுத்து காத்தனர் விடுதலைப்புலிகள். ஆனால் 2009 இல் மிகப்பெரிய இனவழிப்பு இனப்படுகொலையுடன் போராட்டம் மௌனிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பல இயக்கங்கள் உறவானாலும் கிந்தியம் அனைவருக்கும் பயிற்சி வழங்குகிறோம் என்று எமது விடுதலை போராட்டத்தை நசுக்கவே முற்பட்டது. தமிழீழ விடுதலைக்கு என்று ஆரம்பித்த இயக்கங்களை தமிழீழ விடுதலைக்கு எதிராக திருப்பியதுதமிழீழ விடுதலையை முன்னெடுத்த விடுதலைப்புலிகள் இயக்கத்தை அடக்க முற்பட்டது 1987இல் தனது படையை அனுப்பி மிகப்பெரிய தமிழின அழிப்பை மேற்கொண்டது பின் விடுதலைப்புலிகளிடம் ஏற்பட்ட தோல்விகளால் தமது படையை மீட்டுக்கொண்டது 2009 வரையான இனவழிப்பை இனப்படு கொலையை முன்நின்று நடத்தியது.

உலகத்திடம் தமிழீழம் என்ற கோரிக்கையை தமிழர்கள் நாம் முன் வைக்கும்போது அவற்றை ஒரு தீவிரவாத சொல்லாக மேற்குலகத்திடம் காட்டி எமது விடுதலையை ஒடுக்க சிங்களத்திற்கு உதவிக் கொண்டிருக்கின்றது கிந்தியம். உலகம் தமிழ-ீழ விடுதலை போராட்டத்தை ஒரு தீவிரவாத போராட்டமாக காண்பித்து தமிழீழ விடுதலைக்கான அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ள இயலாமல் தடுக்கிறது. அதனால் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களின் பூர்வீகத்தை உறுதிபடுத்த உலகத்திடம் கேட்க வேண்டும்.

மற்றும் ஈழத்தில் நடக்கின்ற இனவழிப்புக்காரணமாக பத்துலட்சத்திற்கு அதிகமான தமிழர்கள் புலம்பெயர்ந்து கனடா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா,பிரான்ஸ், செருமனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, இத்தாலி, நெதர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளின் அகதி உரிமையும் குடியுரிமையும் பெற்று வாழ்கின்றனர். ஆனால் அவர்களின் பாதுகாப்பு உரிமைகளை பாதுகாப்பது கடினமாக உள்ளது. உலகில் எமக்கான நாடு இருந்தால் எமக்காக உலக அரங்கில் குரல் கொடுக்கும். தமிழர்களுக்கெதிராக உலகில் எந்த மூலையில் அவலங்கள் நடக்கிறதோ அதை

தட்டிக்கேட்கும் எமது உரிமைகளை பாதுகாக்கும், தமிழ் மொழிக்கு எதிராக மொழித்திணிப்புக்கெதிராக குரல் கொடுக்கும் 2009 தமிழீழத்தில் நடந்த கொடுமை-களை எதிர்த்து தனது படையை அனுப்பி பாதுகாத்திருக்கும். உதாரணமாக பிரான்ஸ் குடிமகன் வெளிநாடுகளில் தாக்கப்பட்டால் பிரான்ஸ் அரசு தனது குடிமகன் தாக்கப்பட்டதுக்கு கண்டனம் தெரிவித்து தாக்குதல் நடத்தியவனை தாக்குதல் நடத்திய நாட்டின் சிறையில் அடைக்க முடியும் அதே போன்று தமிழர்க்கு என்று நாடு இருந்தால் தமிழர்களின் உலகப்பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் அதேபோன்று விடுதலை அடைந்த பல இனங்கள் தமது இனங்களை காக்க நடவடிக்கை எடுக்கின்றனர். யூதர்கள் மேல் யாரும் தாக்குதல் நடத்தினால் இசுரேல் சும்மா விடாது, உலகில் எந்த மூலையில் இருந்தாலும் தேடி அழிப்பார்கள், ஆனால் இந்த நூற்றாண்டிலேயே மிகப்பெரிய இனவழிப்பாக பார்க்கப்படும் தமிழின அழிப்பை செய்தவர்களை சாதாரணமாக தண்டனை வாங்கிக்கொடுக்க இயலாதவர்களாக நின்று கொண்டிருக்கிறோம்.

யூதர்கள் தமது இனத்தை மொழியை காக்க எவ்வாறு நாடு கேட்டு போராடினார்களோ அவ்வாறு எங்கள் பூர்வீகத்தை உறுதிப்படுத்தி எமக்கான நாட்டு விடுதலையை பெறவேண்டும். நாங்கள் தமிழர்க்கு என்று நாடு வேண்டும் என்று தமிழர்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தி போராடும் போது உலகம் எமக்கான நாட்டை வழங்க முன்வரும்போது அதற்கான அங்கீகாரம் பெறமுடியும். அன்று இரு நாடுகளை இணைத்த தமிழ் குடியரசின் விடுதலையை வென்றிடுவோம். தமிழர்க்கு என்று ஒரு தமிழ்த்தாயகம் அமையும் அமையும்வரை இடைவிடாது சமர் செய்வோம் மொழி, இனம் காக்கின்ற தலைவனின் வழி நின்று வாழ்வோம்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்


கலைப்பிரியன் ஈழப்படையான்

# புலம்(பல்)பெயர் வெண்பா

வேரெறிந்த மண்பறித்து வேறிடத்தில் வீசி
ஊரறியா உறவறியா உவர் நிலத்தில் போட்டாலும் - நல்வாழைக்
குட்டியென நான் முழைப்பேன் சாகேன் உயிர்பிடிப்பேன்மறுபடியென்
பட்டிவாழும் ஊர்போவேன் பறந்து.

தீனின்றித்தெருவிலே கிடந்துமாய்ந்து பொருளற்று
ஊனின்றி உயிர்வற்றி உடமையுமற்று -தலைமேலே
கடன்வந்து கழுத்தறுக்கும் கையறா நிலையிலும் பிரியா
உடனிருந்தே உயிர்தேக்கும் மானம்.

**- குமரன் -**



# தாவீதின் கற்கள்

நான் நினைத்துப்பார்க்கின்றேன்
இந்தநிமிடம் காஸாவை
மேற்குக் கரையை
அதன் புளுதிபடிந்த வீதிகள்
எல்லாம் குருதியில் நனைந்து
சேறும் சகதியுமாகும் காட்சியை
ஆங்காங்கே
யாருமற்று அனாதைகளாக அலைந்து
திரியும் குழந்தைகளை அவர்கள் நெஞ்சுகள் ஏந்தும்
குண்டுகளை அவர்கள் அழுகையின்
கோரத்தை
ஓட்டைகள் நிறைந்த சுவர்களால் உலகை
இரந்து பார்க்கும்
ஏக்கம் நிறைந்த விழிகளை
ஆறுதலுக்கு யாருமற்று அபலைகளாய்
உறவுகளின் பிணத்தை முத்தமிடும்
தாயை தங்கையை மனைவியை
பிள்ளைகளை
என் உயிர் இருக்கும்மட்டும் போராடுவது
இல்லை எதிரியின் குண்டில் மரணிப்பது
என்ற கொள்கை கொண்ட போராளியை
அவர்கள் கடந்த பயணத்தை ஏமாற்றிய
சதிகளை
இரக்கமற்று இன்னும் மொளனம்
காக்கும் ஐநாவை அருகில் இருக்கும்
அரபு தேசத்தை கண்ணீரோடு
கேட்கின்றேன்
இன்னும் விரியுமாமே இஸ்ரேல்
எல்லை?



**(கீர்த்திதீபன்)**

# விழித்துப் பாருங்கள்

விழித்துப் பாருங்கள் பரந்த உலகினிலே
பக்குவமாய் எத்தனை உயிர்கள்
அத்தனை உயிர்களினிலும்
எத்தனை குறைகள்

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது
அதனிலும் அரிது
கூன் குருடு செவிடு நீங்கி பேடு பிறத்தல்
இவற்றையெல்லாம் சீதனமாக கொண்டு பிறந்தவர் நாம்

பெற்றோர் பாரம் என்றிட உற்றாரும்
உதறி தள்ளிட சமுகம் தடுத்து வைத்திட
உம் உலகம் உங்களால் இருண்டு போனதே
விழித்துப் பாருங்கள் நாமும் மனிதர்களே

உங்களில் நாமும் ஒருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்
உங்கள் கை கோர்த்து உங்களில் ஒருவராய்
இப்பாரினிலே எம்மையும் தவழவிடுங்கள்
எங்கள் உரிமைகளை எங்களுக்கே உரித்தாக்குங்கள்

கூன் குருடு செவிடாய் ஊனமுற்று பிறப்பது
எங்கள் குற்றமா இப்படி தான் பிறக்கவேண்டும் - என
கேட்டுப் பிறந்தோமா
விழித்துப் பாருங்கள்

எங்களுக்குள் எத்தனை சாதனை வீரர்கள்
பட்டை தீட்டாத வைரங்கள் போல் - நம்முள்
எத்தனை பேர் - எம்மையும் பட்டை தீட்டுங்கள்
நாமும் சிகரம் தொடுவோம்

இன்னும் ஏன் எங்களுக்கு வேதனை
மாற்று ஆற்றலுடையார்
நாமும் மண்ணில் மங்காத குன்று மணிகளே
இம்மண்ணின் மைந்தர்களே
விழித்துப் பாருங்கள்

**ஹாசினி**
(வவுனியா)

# மக்கள் கருத்துக்காக.....

**அனைத்து தமிழ் உறவுகளுக்கும் வணக்கம்!**

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவையின் முதல் கட்ட செயற்பாடாக வெளிவரவிருக்கும் "முகடு" சஞ்சிகைக்காக மக்கள் கருத்து எனும் தொகுப்புப் பகுதி இடம்பெறவுள்ளது. ஆகவே அனைத்து தமிழ் உறவுகளும் தமிழர் இலக்கிய இளைஞர் பேரவையின் பக்கத்தை பார்வையிட்டு அதன் செயல் விரிவாக்கத்திற்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்து அதன் வளர்ப்பில் பங்குபெறுங்கள்.

சஞ்சிகையின் மக்கள் கருத்துக்காக நிர்வாகத்தால் தெரிவு செய்யப்பட்ட கேள்வி :

1) இன்று தமிழ் மொழிப்பயன்பாட்டில் வேற்றுமொழிக்கலப்பின் வீரியம் அதிகரித்திருப்பது ஏன்?

2) அதனால் தமிழ்மொழியின் எதிர்காலம் என்ன?

உங்கள் கருத்துக்களை மின்னஞ்சல் முகவரிக்கோ (mukadu.editer@gmail.com) அல்லது முகநூல் பக்கத்திலோ (தமிழ்-இலக்கிய-இளைஞர்-பேரவை) பகிருங்கள். தாய் மொழிக்காக ஒரு தேநீர் பருகும் நேரத்தை ஒதுக்குங்கள். எம் இனத்தின் எதிர்காலம் எம் மொழியில்தான் உள்ளது என்பதை யாவரும் மறந்து விட வேண்டாம்

நன்றி

**தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**

இருபத்தோராம் நூற்றாண்டின் பாரிய இன ஆழிவைச்சந்தித்துக் கொண்டிருக்கும் ஓர் பாரம்பரிய இனம் நாங்கள். எங்கள் மொழி பண்பாடு கலாச்சாரம் என்பவற்றை காலத்தோடு சிதைவடையாமல் கூட்டிச்சென்று அடுத்த தலைமுறைக்கு உண்மையுடன் கையளிக்க வேண்டிய கட்டாயப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. அதன் அடிப்படையில் உலகம் முழுவதும் பரந்துவாழும் தமிழர்களின் படைப்பாற்றல் ஆதாரமற்ற கொடிகளாய் வீழ்ந்து கிடக்கின்றது. அவ்வாற்றலை இனங்கண்டு ஒருங்கிணைத்து அதன் தேவைக்கேற்ப வடிவமைத்து அனைத்து மக்களையும் சென்றடைவதற்காகவும். எம் இளம் தலைமுறையினருக்கு எம் பாரம்பரியத்தை பண்பாட்டை கலாச்சாரத்தை செலுத்துவதற்காகவும். எம் உண்மை வரலாற்றின் மீது பூசப்படும் கறைகளை துடைப்பதற்காகவும். வரலாற்றை உண்மையுடன் நீட்டிச்செல்வதற்காகவும்.எம் தமிழ்தேசத்துக்கு ஆதாரமாகவும். உலக தமிழ் இளைஞர்களால் உருவாக்கப்பட்ட இலக்கிய கட்டமைப்பே தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை.

இதன் பணிகள் எப்போதும் தமிழோடும் தமிழ் தேசியத்தோடும் பயணிக்கும். ஆகவே தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை என்னும் பெரும் கட்டமைப்பில் அதன் பணியின் தேவை உணர்ந்த தமிழ் உள்ளங்கள் இணைந்து தமிழ் தமிழ்க்கலாச்சாரம். தமிழ்த் தேசியம் என்பவற்றோடு பயணிப்போம்.

**“தமிழ் எங்கள் உயிருக்கு மேல்”**

**தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**